வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 18.02.2025 செவ்வாய்க்கிழமை இதழ் : 49 பக்கங்கள் : 12

# 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவோம்!

## வரவு - செலவு திட்ட உரையில் ஜனாதிபதி

- காங்கேசன்துறை, மாங்குளத்தில் கைத்தொழில் பூங்கா
- வடக்கில் தெங்கு முக்கோண வலயம்
- பரந்தனில் இரசாயன தொழில்சாலை
- அரச சேவைக்கு 30 ஆயிரம் பேர் சேர்க்கப்படுவர்



கொழும்பு, பெப்ரவரி 18

**நாட்டின் பொருளாதார வளர்ச்சி இந்த ஆண்டில் 5 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தெரிவித்துள்ளார்.**

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க நிதி அமைச்சர் என்ற ரீதியில் நேற்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு தனது முதல் வரவு - செலவு திட்டத்தை சபையில் சமர்ப்பித்தார்.

அதன் பின்னர் சுமார் 2 மணி 45 நிமிடங்கள் வரவு - செலவு திட்ட உரையை ஆற்றினார்.

அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் வருமாறு, நாட்டின் பொருளாதார 11

## யாழ்ப்பாண பொதுநூலகத்தின் அபிவிருத்திக்கு 10 கோடி ரூபா

### ஜனாதிபதி அநுர நேற்று அறிவிப்பு

கொழும்பு, பெப். 18

தேர்தல் காலத்தில் வாக்குகளுக்காக நூலகங்களுக்கு தீ வைக்கப்பட்ட காலம் வரலாற்றில் உண்டு. யாழ்ப்பாணத்தில் உள்ள நூலகத்துக்கும் அதுதான் நடந்தது. யாழ் பொது நூலகத்தை அபிவிருத்தி செய்வதற்கு 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் முன்வைத்த 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - 11

## வட்டுவாகல் பாலத்துக்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு

### ரவிகரன் எம்.பி. மகிழ்ச்சி

முல்லைத்தீவு, பெப். 18

தமது அயராத தொடர் முயற்சியால் முல்லைத்தீவு மக்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு தீர்வு பெற்றுக் கொடுத்திருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைவதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணப் பணியினை ஆரம்பிப்பதற்கு 2025ஆம் ஆண்டுக்குரிய வரவு - செலவுத்திட்டத்தில் 100 11

## எம்.பிக்களுக்கு இவ்வாண்டு வாகனங்கள் வழங்கப்படா!

### நேற்று அறிவித்தார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 18

இந்த ஆண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வாகனங்கள் வழங்கப்படாது என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

ஏனெனில் இந்த நோக்கத்துக்காக பணம் ஒதுக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் முன்வைத்த 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட முன்மொழிவின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வாண்டு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் 11

## அரச ஊழியர்கள் சம்பளம் 15,750 ரூபாவால் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 18

அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் அதிகரிக்கப்படும் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

இதன்படி, அரச ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளம் 15,750 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அரச ஊழியர்களின் அடிப்படைச் சம்பளம் 24,250 ரூபாவில் இருந்து 40,000 ரூபாவாக அதிகரித்துள்ளது.

சம்பள அதிகரிப்புக்கு மேலதிகமாக 11

## துண்டு விழும் தொகை 2,200 பில்லியன் ரூபாய்!

கொழும்பு, பெப். 18

2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2,200 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகின்றது.

பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி அநுரகுமார சமர்ப்பித்த வரவு-செலவுத் திட்டத்துக்கு அமைய, 2025 ஆம் ஆண்டில் அரச வருமானம் 4,990 பில்லியன் ரூபா வாகக் காணப்படுகின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் 11

## அரசினால் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியவில்லை!

### பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 18

அரசாங்கத்தின் உறுதிமொழிகள் வெறும் ஏட்டில் மாத்திரமே காணப்படுவதாக பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- 11

## உள்ளூராட்சி சபை சட்டமூலம் பாராளுமன்றில் நிறைவேறியது

கொழும்பு, பெப். 18

உள்ளூராட்சி அதிகார சபைகள் தேர்தல் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டமூலம் நேற்று திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் நிறைவேற்றப்பட்டது.

இந்த சட்டமூலத்துக்கு இரண்டாவது வாசிப்பில் 187 எம். பிக்களும் மூன்றாவது வாசிப்பில் 158 எம். பிக்களும் வாக்களித்தனர். இதேசமயம், எதிராக எந்த வாக்குகளும் பதிவாகவில்லை. 11

## உள்ளூராட்சித் தேர்தலை அரசு பிற்போடவேண்டும்

### சிறீதரன் எம்.பி. கோரிக்கை

கொழும்பு, பெப். 18

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலைப் பின்போடுமாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அநுரகுமார அரசிடம் நேற்று வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும் 11

## கிணற்றில் தவறி விழுந்து குழந்தையும் மாமனும் பலி!

### வட்டுக்கோட்டையில் சோகம்

- பு. கஜிந்தன் -

யாழ்ப்பாணம், பெப். 18

வட்டுக்கோட்டையில் கிணற்றில் தவறி விழுந்து 3 வயது குழந்தையும் தாய்மாமனும் உயிரிழந்தனர்.

வட்டுக்கோட்டை - சங்கரத்தை - திக்கிராய் குளத்தின் அருகிலுள்ள கிணற்றிலேயே இருவரும் தவறி விழுந்து உயிரிழந்தனர். 11

## வடக்கில் சட்டம் அமுலில் இல்லை

### சாடுகின்றார் வீரவன்ஸ

கொழும்பு, பெப். 18

வடக்கில் சட்டம் முறையாக அமுல்படுத்தப்படுவதில்லை என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கில் விகாரையொன்றுக்கு எதிராக போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. நீதிமன்ற உத்தரவு இருக்கின்றபோது எவ்வாறு போராட்டம் 11

## கோதுமை மா விலை 10 ரூபாவால் குறைப்பு

கொழும்பு, பெப். 18

பிறிமா மற்றும் செரண்டிப் நிறுவனங்கள் இன்று செவ்வாய்க்கிழமை முதல் கோதுமை மாவின் விலையைக் குறைக்க தீர்மானித்துள்ளன.

அதன்படி, ஒரு கிலோ பிறிமா மற்றும் செரண்டிப் கோதுமை மாவின் விலை 10 ரூபாவால் குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு தனது வரவு - செலவுத் திட்டத்தை நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தின் நிலையில் இந்த அறிவிப்பும் வெளியிடப்பட்டுள்ளது. (அ)

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முந்தைய அரசின் தொடர்ச்சியே அநுரவின் வரவு - செலவு திட்டமும்!

## ஹர்ஷ டி சில்வா எம். பி.

கொழும்பு, பெப். 18

முந்தைய அரசாங்கத்தின் பொருளாதார திட்டத்தின் தொடர்ச்சியாகவே ஜனாதிபதி அநுரவின் வரவு - செலவு திட்ட உரை இடம்பெற்றுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

இந்தத் திட்டம் தவறு என்று கூறவில்லை என்றாலும், அரசாங்கத்தின் சித்தாந்த நிலைப்பாடு குறித்து இது கடுமையான கவலைகளை எழுப்புகிறது.

"ஜே. வி. பி. மற்றும் தேசிய மக்கள் சக்தி கருத்தியல் அடிப்படையிலான கேள்விகளுக்கு பதிலளிக்க வேண்டியுள்ளது. இங்கு கலந்துரையாடப்பட்டது ஒரு புதிய தாராளமய வேலைத்திட்டம். அவர்கள் 40 ஆண்டுகளாக இதுபோன்ற கொள்கைகளை எதிர்த்தனர். ஆனால், இப்போது அவற்றை ஏற்றுக்கொண்டால், அவர்களின் கடந்தகால எதிர்ப்பின் நோக்கம் என்ன?"

"இந்த வரவு - செலவுத் திட்டத்திற்கும் முந்தைய வரவு செலவு திட்டத்துக்கும் எந்த வித்தியாசத்தையும் நாங்கள் காணவில்லை.

"அவர்கள் இப்போது அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு ஒரு ஹோல்டிங் நிறுவனத்தை நிறுவுவதை ஆதரித்தால் அல்லது எரிபொருள் மற்றும் மின்சார விலை நிர்ணய சூத்திரங்களை ஒப்புக்கொண்டால், ஏன் முன்பு அவற்றை எதிர்த்தார்கள் என்று நாம் கேட்க வேண்டும்?" என்று அவர் கூறினார். அவர்களின் எதிர்ப்பு மட்டும் இல்லையென்றால், நாடு முன்பே முன்னேறியிருக்க முடியும்.

"ஆனால், அவர்கள் இப்போது ஒரு சமூக சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுக் கொண்டால், நாங்கள் அதை வரவேற்கிறோம், மேலும் அதை ஒரு வெற்றியாகக் காண்கிறோம்" - என்றார். (ஐ)

# ஐக்கிய மக்கள் சக்தி - ஐ.தே.க. பேச்சுகள் நிறுத்தப்படவில்லை

## முஜிபுர் ரஹ்மான் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 18

ஐக்கிய மக்கள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் முன்னெடுத்து வரும் பேச்சுவார்த்தை நிறுத்தப்படவில்லை. எதிர்காலத்தில் அது தொடரும். அதேநேரம் இந்த பேச்சுவார்த்தை உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்காகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதி பொதுச் செயலாளரும் பேச்சுவார்த்தை குழுவின் அங்கத்தவருமான முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளுக்கிடையில் இடம்பெற்றுவந்த பேச்சு இடை நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படும் செய்தி தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு கூறினார்.

மேலும், எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்துக் கொண்டு பாராளுமன்றத்தில் பலமான எதிர்க்கட்சியை ஏற்படுத்துவதற்காக எதிர்க்கட்சியில் இருக்கும் அனைத்து கட்சிகளுடனும் கலந்துரையாட நடவடிக்கை எடுத்தோம். அது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன் ஐக்கிய தேசிய கட்சியுடனான இந்த கலந்துரையாடல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை இலக்குவைத்து மேற்கொள்ளப்படுவதல்ல. எதிர்காலத்தில் அரசியல் ரீதியில் எவ்வாறு இணைந்து செயற்படுவது விடயமே கலந்துரையாடப்பட்டு வருகிறது - என்றார். (அ)

# 20 லீற்றர் கோடாவுடன் சுழிபுரத்தில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 18

சுழிபுரம் - காட்டுப்புலம் பகுதியில் 20 லீற்றர் கோடாவு டன் ஒருவரை தாம் கைதுசெய்துள்ளோம் என்று வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

வட்டுக்கோட்டை பொலிஸார் நேற்று திங்கட்கிழமை நடத்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையிலேயே சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். கைதானவர் அதே இடத்தை சேர்ந்த 55 வயது நபராவார்.

கைதான சந்தேகநபரை இன்றைய தினம் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (ஐ- 05)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வியாழனன்று கிளிநொச்சியில் போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 18

காணாமல் ஆக்கப்பட்டவரின் உறவினர்கள் நாளை மறுதினம் வியாழக்கிழமை கிளிநொச்சியில் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளனர். தமது உறவுகளுக்கு நீதி கோரி கிளிநொச்சியில் ஆரம்பித்த போராட்டம் 9 ஆண்டுகள் நிறைவடைவதை ஒட்டியே இந்தப் போராட்டம் நடைபெறவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்க வேண்டும் என்று வடக்கு, கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத் தலைவி யோ. கனகரஞ்சினி கேட்டுள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் தெரிவித்தவை வருமாறு,

ஒன்பது ஆண்டுகளாக எங்களுடைய பிள்ளைகளை மீட்பதற்கு பல்வேறு வழிகளிலும் போராடி சர்வதேசத்திற்கு உண்மை நிலைமைகளை எடுத்து கூறி வருகின்றோம். தமது பிள்ளைகளை தேடிய 300இற்கும் மேற்பட்ட தாய், தந்தையர்கள் உயிரிழந்துள்ளனர்.

உள்ளூரில் எமக்கு தீர்வு கிடைக்காத நிலையில் ஜெனிவா கூட்டத்தொடரிலும் பிரச்னைகளை முன்வைத்து வருகின்றோம். அரசாங்கத்துடன் பேசுவதாக சொல்லி கால இழுத்தடிப்பையே செய்கின்றனர்.

பிள்ளைகளை காணாது இறந்த தாய் தந்தையரைப் போல - மாரித்தவளைபோல் நாங்களும் கத்திவிட்டு இறந்துவிடுவோமோ என்ற ஏக்கம் உள்ளது.

இனிவரும் கூட்டத்தொடரிலாவது ஜனாதிபதி சர்வதேசத்தின் கோரிக்கையை ஏற்று பெற்றுத்தருவதற்கு முன்வர வேண்டும். பல தலைவர்களை இந்த ஒன்பது வருடங்களில் கண்டுள்ளோம். இவர்கள் தெற்குக்கு ஒரு நீதியும் வடக்குக்கு ஒரு நீதியும் வழங்குகின்றனர்.

எனவே எதிர்வரும் 20ம் திகதி கிளிநொச்சியில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு ஒன்பது வருடங்கள் நிறைவடைகின்றன. இந்த நிலையில், நீதி வேண்டி போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளோம். இந்தப் போராட்டத்துக்கு அனைவரும் வலுச்சேர்க்க வேண்டும் - என்றார். (ஐ)

# சிறுபிள்ளை வைத்திய நிபுணர் திடீரென பணியிலிருந்து விலகல்

## மன்னார் வைத்தியசாலையில் சிறுவர்கள் வைத்திய சேவையை பெறுவதில் சிரமம்

மன்னார், பெப். 18

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றிய சிறுவர்களுக்கான விசேட வைத்திய நிபுணர் எவ்வித முன் அறிவித்தலும் இன்றிப் பணியில் இருந்து விலகி உள்ளமையால் தமது குழந்தைகளுக்கும், சிறுவர்களுக்கும் உரிய முறையில் வைத்திய சேவையைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம்-07 மற்றும் பிரசவிக்கின்ற குழந்தைகளுக்கான விசேட சிறுபிள்ளை வைத்திய நிபுணர் கடமையாற்றி வந்துள்ளார்.

இந்த நிலையில் குறித்த வைத்திய நிபுணர் எவ்வித முன் அறிவித்தல் இன்றிப் பணியில் இருந்து விலகியுள்ளார்.

இதனால் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சிறுவர்களுக்கான நோயாளர் விடுதி இலக்கம் 7 இல் அனுமதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் புதிதாக பிறக்கும் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் தாமதம் அடைந்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட தமது குழந்தைகளை யாழ்ப்பாணம் அல்லது வவுனியா வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பெற்றோர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

எனவே இவ் விடயத்தில் வடக்கு மாகாண ஆளுநர் உடனடியாக தலையிட்டு குறித்த வைத்திய நிபுணருக்கு பதிலாக மாற்று ஒருவரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் ஆஸாத் எம்.ஹனிபாவை தொடர்பு கொண்டு வினவிய போது,

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த சிறு பிள்ளைகளுக்கான வைத்திய நிபுணர் திடீரென கடமைக்கு சமூகமளிக்காது இருந்தார். அவர் தொடர்ச்சியாக கடமைக்கு வருகை தராத நிலையில் அவருடன் தொடர்பை ஏற்படுத்தினோம்.

எனினும் தான் வெளிநாடு செல்ல உள்ளதாகவும், இதனால் கடமைக்குச் சமூகமளிக்க வில்லை என வட்ஸ்அப் ஊடாக கடிதத்தை அனுப்பி வைத்துள்ளார். இவ்விடயம் தொடர்பாக நாங்கள் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளோம். இந்த நிலையில் தற்காலிகமாக வவுனியாவில் இருந்து ஒரு வைத்திய நிபுணரை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது - என்றார். (அ)

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் அனுமதியை கலாசாலைகளுக்கு தாருங்கள்!

## பிரதமரிடம் கலாசாலை அதிபர் லலீசன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், பெப். 18

கல்வி மறு சீரமைப்பில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சியை அல்லது பட்டப்பின் கல்வி டிப்ளோமோதாரிகளுக்கான பயிற்சியை கலாசாலைகளால் மேற்கொள்ள முடியும் இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் சந்திர மௌலீசன் லலீசன் தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை கலாசாலையில் புனரமைக்கப்பட்ட கிருஷ்ணை படிப்பகம் பிரதமர் ஹரிணி அமர சூரியவால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வின் போது கலாசாலையின் எதிர்காலம் குறித்து வேண்டுகோள்களை முன்வைத்த அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் தெரிவித்த முக்கிய விடயங்கள் வருமாறு,

கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படுவோர் தற்போது குறைவடைந்து வருகின்றனர். ஆங்கிலம் உடற்கல்வி துறைகளில் டிப்ளோமோ பட்டம் பெற்ற ஆசிரியர்கள் உயர்தர தகைமையுடன் போட்டி பரீட்சையில் உள்வாங்கப்பட்ட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், தனியார் பாடசாலை ஆசிரியர்கள், பிரிவேனா ஆசிரியர்கள் பயிற்சிக்காக கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படுகின்றனர். தற்போது இத்தகைய ஆசிரியர் நியமனங்கள் குறைவடைந்து உள்ளமையால் கலாசாலைகளுக்கு உள்வாங்கப்படும் ஆசிரியர்கள் எண்ணிக்கையும் குறைவடைந்து உள்ளது.

தேசிய கல்வி நிறுவகம் பட்டப்பின் கல்வி டிப்ளோமோ கற்கையை பகுதி நேரமாக பாடசாலை ஆசிரியர்களின் உதவியுடன் நடத்தி வருகிறது. இதனை முழு நேர கற்கையாக மாற்றி கலாசாலைகள் ஊடாக குறைந்த செலவில் நடைமுறைப்படுத்த முடியும். மேலும் முன்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிய வாண்மைத்துவ பயிற்சிகளை பாடசாலை ஆசிரியர்களின் கொள்ளளவு விருத்திப் பாடப் பயிற்சிகளை கலாசாலைகள் ஊடாக வழங்க முடியும்.

கல்வி மறுசீரமைப்பில் ஆசிரியர் கல்விக்கு முக்கிய இடம் வழங்கப்பட வேண்டும். 2009 ஆம் ஆண்டிற்கு பிறகு ஆசிரியர் கல்வியின் பாடத்திட்டம் இதுவரை மாற்றி அமைக்கப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது. பாடசாலை கல்வி வளம் பெறுவதற்கு ஆசிரியர் கல்வி உரமாக அமைய வேண்டும்.

சேர். பொன். இராமநாதன் நீண்ட கனவுடன் இந்த கலாசாலை உருவாக பங்களிப்பு செய்தார். கலாசாலை என்ற பெயர் நிலைத்து நிற்குமாறு கல்வி மறு சீரமைப்பில் கலாசாலைகளை மாற்றி அமைக்குமாறு முன்மொழிவை வழங்குகிறோம் - என்றார்.

பிரதமர் தனது உரையின் போது கல்வி மறு சீரமைப்பில் ஆசிரியர் கல்விக்கு முக்கிய இடம் வழங்கப்படும் என்று பதிலளித்து உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
18.02.2025 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மாசி 06

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரில்வின் கூற முற்படுவது

வரவு - செலவு திட்டம் தொடர்பில் எதிர்க்கட்சியின் ஆலோசனைகள் தங்களுக்குத் தேவையில்லை என்று ஜே. வி. பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்திருக்கின்றார். கடந்தகாலங்களில் நாட்டை வங்குரோத்து நிலைக்குள் தள்ளிய வரவு - செலவுத் திட்டங்களை தயாரித்தவர்கள் எங்களுக்கு ஆலோசனை வழங்குகிறார்கள் என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார். இது வரவு - செலவுத் திட்டத்துக்கு மட்டுமானதா அல்லது எதிர்காலத்தில் அரசாங்கம் மேற்கொள்வதற்குத் திட்டமிட்டுள்ள அனைத்து விடயங்களுக்குமானதா என்னும் கேள்வியும் எழுகின்றது. அவ்வாறான விடயங்களை நோக்கியும் எதிரணியினரின் ஆலோசனைகள் தேவையில்லை என்றும் ரில்வின் போன்றவர்கள் கூறக்கூடும்.

ரில்வின் சில்வா அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பலம் வாய்ந்த கட்சியின் செயலாளர் என்னும் வகையில் அவருக்கு இவ்வாறு கூற அதிகாரம் இருக்கின்றது. மேலும், கடந்த காலத்தில் அதிகாரத்தில் இருந்த எந்தவோர் அரசியல் கட்சியும் எதிர்க்கட்சிகளின் ஆலோசனையை கேட்டு வரவு - செலவுத் திட்டம் தயாரித்த வரலாறும் இல்லை. இதேபோன்று எதிரணியினருடன் கலந்துரையாடி நாட்டின் எதிர்காலம் தொடர்பான முடிவுகளை மேற்கொண்டவர்களும் இல்லை. இந்த நிலையில் ஆட்சியிலிருப்பவர்கள்தான் அவர்களின் தீர்மானங்களால் ஏற்படும் நன்மைக்கும் தீமைக்கும் பொறுப்பானவர்கள்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரையில் அவர்களிடம் பல திட்டங்கள் இருக்கின்றன எனத் தெரிகின்றது. ஆனால், அனைத்தையும் செய்வதற்கான வல்லமை இருக்கின்றதா என்பதுதான் பிரச்னை. இங்கு வல்லமை என்பது ஒரு கட்சிக்குள்ள பாராளுமன்ற பெரும்பான்மை தொடர்பானதல்ல. மாறாக, ஒரு கட்சி விரும்பும் விடயங்களை மேற்கொள்வதற்கான புறச்சூழலும் சவால்களை எதிர்கொள்ளக் கூடிய கட்சியின் ஆற்றலும்தான் ஒரு கட்சியின் நகர்வுகளை சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ தீர்மானிக்கக் கூடியது.

ஜே. வி. பி. ஒப்பீட்டடிப்படையில் வடக்கு - கிழக்கிலுள்ள தமிழ் மக்களின் ஆதரவையும் பெற்றிருக்கும் ஒரு கட்சி. அதனை ஒரு மாற்றமாகவே அவர்கள் பார்க்கின்றனர். ஒரு வகையில் மாற்றம் தான். ஆனால், அந்த மாற்றம்,நிரந்தரமானதா அல்லது தற்காலிகமானதா என்பதில்தான் அவர்கள் கவனம் செலுத்த வேண்டும். தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்பை முதலில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயலில் காண்பிக்க வேண்டும். எதிர்பார்ப்பு என்பது சமஷ்டியோ, வடக்கு - கிழக்கு இணைப்போ அல்ல. மாறாக, அடிப்படையான விடயங்கள். அவற்றை ஒருவேளை செயலில் காண்பித்தால் தமிழ் மக்களின் ஆதரவை பேணிக்கொள்ள முடியும்.

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் பாரம்பரிய தமிழ்க் கட்சிகள் மீதான நம்பிக்கையை முற்றிலும் இழந்து விட்டனர். தற்போதைய சூழலில் வாக்களிப்பது ஒரு தமிழ்க் கட்சிக்கு வாக்களிப்பதற்கான எஞ்சியுள்ள ஆர்வம் மட்டும் தான். அதிலும் மாற்றம் ஏற்படலாம்.

# வடக்கு மக்களின் துன்பங்களுக்கு அரசியல்வாதிகளே காரணம்!

### அமைச்சர் சந்திரசேகர் சாடல்



யாழ்ப்பாணம், பெப். 18

வடக்கு அரசியல்வாதிகள் மக்களின் வாழ்கையை மேம்படுத்துவது தொடர்பிலோ பாதுகாப்பது தொடர்பிலோ நடவடிக்கை எடுக்கவில்லை. இதன் விளைவே மக்கள் துன்பங்களை சந்தித்து வருகிறார்கள் என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

சுழிபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடந்த நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்விக்கு சிறந்த பெயர் பெற்ற இடமான யாழ்ப்பாணத்தில் இன்று துர்நடத்தைகள் அதிகரித்து வருவதற்கு காரணம் என்ன?

கலை, கலாசாரத்தைக் கட்டிக் காத்த யாழ்ப்பாணத்தில் ஏன் இத்தகைய நிலை. ஜனாதிபதித் தேர்தலுக்காக நாம் வீடு வீடாகச் சென்றபோது இங்கு இடம் பெற்று வருகின்ற கசிப்பு உற்பத்தியை நிறுத்த வேண்டும், போதைப் பொருள் பயன்பாடு அதிகரித்துள்ளது - இதனை நிறுத்த வேண்டும் என்றே கேட்கிறார்கள்.

போதை பொருள் கடத்தல், பயன்பாடு அதிகரித்துள்ளமையை நிறுத்தவேண்டும்.

வாள் வெட்டு அச்சுறுத்தல்கள் இடம்பெறுகின்றன. ஒரு சில பொலிஸ்காரர்களின் அட்டூழியங்கள் அதிகரித்துள்ளன.

இவை எல்லாவற்றக்கும் அரசியல்வாதிகளும் காரணமாகின்றர்கள். எந்தவோர் அரசியல்வாதியும் மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு - பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை - என்றார். (ஐ)

## 'ஆற்றல்' பெருக்கல் வாய்ப்பாடு வெளியீடு

யாழ்ப்பாணம், பெப்.18

'ஆற்றல்' பெருக்கல் வாய்ப்பாடு வெளியீடு - 2025 யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சபாலிங்கம் அரங்கில் நாளை மறுதினம் வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி அதிபர் இ. செந்தில்மாறன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்ப்பாணம் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி நிர்வாகம்) திருச்செல்வம் ஆயவன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் உதவிக் கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி அலகு) இரட்நாயகம் கணேசலிங்கம் கலந்து கொள்வார். (எ)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், பெப். 18

மூத்த பத்திரிகையாளரும் கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூகவள நிலையத்தின் கௌரவ பொருளாளராகவும் பணியாற்றிய பாரதி இராஜநாயகத்துக்கு அஞ்சலி நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நீர்வேலியில் அமைந்துள்ள கருவி நிறுவனத்தில் கருவி நிறுவனத்தின் தலைவர் கணபதி சர்வானந்தா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல் ஆய்வாளர் மா. நிலாந்தன், கருவி நிறுவன ஸ்தாபகர் க. தர்மசேகரம் ஆகியோர் அஞ்சலி உரைகளை நிகழ்த்துவர் (ஐ)

## நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு நிகழ்வும்

யாழ்ப்பாணம், பெப். 18

சைவ பரிபாலன சபை நடத்தும் புண்ணிய நாச்சியம்மையார் தினமும் பரிசளிப்பு நிகழ்வும் நாளை புதன் கிழமை காலை 9 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ பரிபாலன சபை தலைவர் உ. தயானந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலினி முகுந்தன், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ)

## 84 இலட்சம் ரூபாய் கொள்ளை; சந்தேகநபர் கொழும்பில் கைது!

கொழும்பு, பெப். 18


யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரை கடத்தி 84 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாயைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் கொழும்பில் கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக டுபாய்க்கு தப்பிச் செல்ல முயன்றபோதே குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

கைதான நபர் யாழ்ப்பாணத்தை சேர்ந்த 27 வயது நபராவார். கைதான நபர் விசாரணைகளுக்காக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவரை வெளிநாட்டுக்கு அனுப்புவதாக நாடகமாடி கடந்த 8ஆம் திகதி அவரை தமது இடத்துக்கு வரவழைத்த குழு ஒன்று அவரிடமிருந்து 84 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாயை மிரட்டிப் பறித்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். வாகனவசதிப் பெருகும். நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வீர்கள்.

**இடபம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளால்மகிழ்ச்சியும் உறவினர்களால் ஆதாயமும் உண்டு. அனாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வேற்றுமதத்தவர் உதவுவார்.

**மிதுனம்**
எதிர்ப்புகள் அடங்கும். பிள்ளைகளால் ஆதரவு கிடைக்கும்.வீடு, வாகனப் பராமரிப்புச் செலவுகள் அதிகரிக்கும். நவீன மின்னணு சாதனங்கள் வாங்குவீர்கள். தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**கடகம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். விருந்தினரின் வருகையால் வீடு களைகட்டும். அரசால் ஆதாயம் உண்டு. வேற்று மதத்தவர் அறிமுகமாவார்கள். வெற்றி பெறும் நாள்.

**சிம்மம்**
இங்கிதமான பேச்சால் எல்லோரையும் கவருவீர்கள். பிள்ளைகளின் புது முயற்சிகளை ஆதரிப்பீர்கள். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். வாகனத்தை சீர் செய்வீர்கள்.

**கன்னி**
சந்திரன் இருப்பதால் முதலில் சந்தேகப்படுவதை நிறுத்துங்கள். குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் தன்னைப் புரிந்துக்கொள்ளவில்லை என ஆதங்கப்படுவீர்கள்.

**துலாம்**
பிள்ளைகளிடம் எதிர்மறையாகப் பேச வேண்டாம். ஆடம்பரச் செலவுகளால் சேமிப்புகள் கரையும். வியாபாரத்தில் வேலையாட்களால் பிரச்னை கள் வரக்கூடும்.

**விருச்சிகம்**
எதிலும் வெற்றி பெறுவீர்கள். சொந்த பந்தங்கள் சிலர் கேட்டஉதவியை செய்வார்கள். வெளிவட்டாரத்தில் செல்வாக்கு உயரும்.விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். சாதிக்கும் நாள்.

**தனுசு**
உங்களின் நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் பக்கபலமாக இருப்பார்கள். பிரபலங்கள் உதவுவார்கள். பழைய கடன் பிரச்னை கட்டுக்குள் வரும்.

**மகரம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். பிரச்னைகளுக்கு எதார்த்தமாக முடிவுஎடுப்பீர்கள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஓய்வெடுக்க முடியாதபடி வேலைச்சுமையும் அலைச்சலும் இருக்கும்.புது பொருள் வந்து சேரும். கவனம் தேவைப்படும் நாள்.

**மீனம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை பிறக்கும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். பிரச்னைகள் நீங்கும்.

# தமிழ்த் தேசிய பசுமை இயக்க ஏற்பாட்டில் ஊரெழுவில் சிறுதானியப் பொங்கல் விழா



யாழ்ப்பாணம், பெப்.18

தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் தைப்பொங்கல் விழாவை ஆண்டுதோறும் சிறு தானியப் பொங்கல் விழாவாகக் கொண்டாடி வருகிறது. இராச போசனம் என்ற கருப்பொருளில் நடைபெறும் இச் சிறுதானியப் பொங்கல் விழா இம்முறை ஊரெழு வளர்பிறை சனசமூக நிலைய முன்றலில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக் கிழமை மாலை நடைபெற்றது.

வளர்பிறை சனசமூக நிலையத்தின் தலைவர் மு. ஐங்கரன் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் பிரதம விருந்தினராக தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் கலந்து கொண்டார்.

பாரம்பரிய விளையாட்டுக்களில் ஒன்றான உறியடியோடு கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. இச் சிறுதானியப் பொங்கல் விழாவில் சாமை மற்றும் வரகு அரிசிப் பொங்கல்களும் குரக்கன் கூழும் பரிமாறப்பட்டன.

தமிழர்களின் உணவுப் பண்பாட்டில் சிறுதானியங்கள் அருகிவரும் நிலை யில், மீளவும் அவற்றின் பயன் பாட்டை ஊக்கிவிக்கும் நோக் கிலேயே சிறுதானியப் பொங் கல் விழா ஆண்டுதோறும் கொண்டாடப் பட்டு வரு கின்றது. (எ-05)

# 'மாணிக்கவாசகரும் யாத்திரைப்பத்தும்' சொற்பொழிவு

யாழ்ப்பாணம், பெப்.18

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத் தொடர் - 45 சிறுப்பிட்டி மேற்கு அருள்மிகு சிறீ நாகதம்பிரான் ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 04. 00 மணிக்கு நடைபெறவுள்ளது. மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தை தொடர்ந்து இளஞ்சைவப் புலவர் நித்திய பாபுதரன் "மாணிக்கவாசகரும் யாத்திரைப்பத்தும்" என்னும் விடயப் பொருளில் சொற்பொழி ஆற்றுவார்.

சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டு பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. (எ)

# கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி கடமைகளை நேற்று பொறுப்பேற்றார்

யாழ்ப்பாணம், பெப்.18

கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்ட ஏ. நளின் தர்சன நேற்றையதினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

இவர் மோதரையில் 3 வருடம் 3 மாத காலம் கடமையாற்றிய நிலையிலேயே, நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்து சர்வமத ஆசிகளுடன் கடமைகளைப் பொறுப்பேற்றுக்கொண்டார்.



கோப்பாய் பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியாக கடந்த மூன்று ஆண்டுகளாக பணியாற்றிய வெதகெதர, பதுளைக்கு திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள நிலையிலேயே அவர் குறித்த பதவியை நளின் தர்சன பொறுப்பேற்றுக்கொண்டார். (எ-05)

# பக்த நந்தனார் இசை நாடகம் அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், பெப்.18

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானமும் நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலையும் இணைந்து நடத்தும் 'பக்த நந்தனார்' இசை நாடக அரங்கேற்றமும் கௌரவிப்பு விழாவும் ஆலயச் சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 05. 00 மணிக்குத் தேவஸ்தானத் தலைவர் சி. தயாநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

தேவஸ்தானப் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு சிவசிறீ இராஜேந் திர சுவாமிநாதக்குருக்கள் மற்றும் சிவாக்ஷர கௌசிகக் குரு குலப்பொறுப்பாளர் பிரம்ம சிறீ. ப. சிவானந்தசர்மா ஆகி யோரின் ஆசியுரையும்,

வாழ்த்துரைகளை சமய ஜோதி கதிர் காமன் நிஜ லிங்கமும் தேவஸ் தான முன்னாள் தலைவர் த. நடராஜாவும் வழங்கவுள்ளனர். (எ)

# "அழகான வாழ்க்கையை அனைவருக்கும் ஏற்படுத்தி கொடுப்பதே அரசின் நோக்கம்"

கிளிநொச்சி, பெப்.18

வளமான நாடு அழகான வாழ்க்கையை அனைவருக்கும் ஏற்படுத்திக் கொடுப்பதே எமது நோக்கம் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

கிளிநொச்சி, முரசுமோட்டையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோத செயல்பாடுகள் அதிகளவில் இடம்பெற்று வருகின்றன.

கசிப்பு உற்பத்தி, சட்டவிரோத மணல் அகழ்வு போன்ற பல்வேறு வகையான குற்றச் செயல்கள் இடம்பெற்று வருவதாகவும் இவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் எனவும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்தனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் எமக்கு சவால் அல்ல!

## கூறுகிறது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, பெப். 18

**சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துவிட்டன. எனவே உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எமக்கு சவாலாக அமையாது. அரசாங்கமே அந்த சவாலை எதிர்கொண்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹிணி கவிரத்ன தெரிவித்தார்.**

கொழும்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தம்மை ஏமாற்றியுள்ளதாக இளைஞர் யுவதிகள் குறிப்பிடுகின்றனர். கடந்த தேர்தல்களில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்தவர்கள் இம்முறை ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடுவதற்காக நேர்முகத் தேர்வுகளில் கலந்து கொண்டுள்ளனர்.

இளைஞர், யுவதிகளைப் போன்றே பெண்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்தியில் முன்னுரிமையளிக்கப்படும். ஏனைய துறைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் அவசியமாகும்.

தற்போது சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்துவிட்டன. எனவே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எமக்கு சவாலாக அமையாது. அரசாங்கமே அந்த சவாலை எதிர்கொண்டுள்ளது. நாட்டிலுள்ள பிரச்னைகளுக்கு அரசாங்கத்துக்கு சிறந்த தீர்வுகளை வழங்க முடியாமல் போயுள்ளமையே இதற்கான காரணமாகும்.

நெல்லுக்கான நிர்ணய விலை தொடர்பில் அரசாங்கம் பெரியவில் பேசினாலும், விவசாயிகள் அரசாங்கத்துக்கு நெல்லை வழங்கவில்லை. அரசாங்கத்தால் தாமும் ஏமாற்றப்பட்டுள்ளோம் என்பதை விவசாயிகள் குறிப்பிடுகின்றனர். அரசாங்கத்துக்கு விவசாயிகள் முதலாவது சிவப்பு எச்சரிக்கை விடுத்துள்ளனர். அடுத்து அரச உத்தியோகத்தர்கள் தயாராகின்றனர்-என்றார். (அ)

# மின் கம்பத்தில் கார் மோதி இளைஞன் பலி!

கொழும்பு, பெப். 18

பண்டாரகமை - கெஸ்பேவ பிரதான வீதியில் கம்மன்பில வாவிக்கு அருகில் நேற்று அதிகாலை இடம்பெற்ற கார் விபத்தில் இளைஞர் ஒருவன் உயிரிழந்துள்ளதாக பண்டாரகமை பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த கார் ஒன்று வீதியை விட்டு விலகி அருகிலிருந்த மின் கம்பத்தில் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பண்டாரகமையிலிருந்து கெஸ்பேவ நோக்கிப் பயணித்த கார் ஒன்றே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த சாரதி பண்டாரகமை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மெதகம பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே உயிரிழந்துள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பண்டாரகமை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அதிவேக நெடுஞ்சாலையில் பணியாற்றும் பெண் காசாளர் பாலியல் துஷ்பிரயோகம்!

## பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம்

கொழும்பு, பெப். 18

கொட்டாவை அதிவேக நெடுஞ்சாலை வீதி மாற்று நுழைவாயிலில் காசாளராக பணி புரியும் பெண் ஒருவரை பாலியல் துஷ்பிரயோகம் செய்தார் எனக் குற்றஞ்சாட்டப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாக நெடுஞ் சாலை சுற்றுலா பொலிஸ் பிரிவின் பொலிஸ் அத்தியட் சகர் அலுவலகம் தெரிவித்துள் ளது.

நெடுஞ்சாலை சுற்றுலாப் பிரிவின் கொட்டாவை மாற்றுப் பிரிவில் கடமையாற்றிய பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவரே பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட பெண் ஹோமாகம பொலிஸ் நிலையத்தில் அளித்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து, சந்தேக நபரான பொலிஸ் கான்ஸ்டபிள் பணி இடைநீக்கம் செய்யப் பட்டதாக நெடுஞ்சாலை சுற்றுலாப் பிரிவின் பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகம் தெரிவித்துள்ளது. (அ)

# சீரற்ற காலநிலை காரணமாக மரக்கறிகள் விளைச்சல் வீழ்ச்சி!

கொழும்பு, பெப். 19

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு வரப்படும் மரக்கறிகள் அளவு குறைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாணத்திலிருந்து தம்புளை பொருளாதார மத்திய நிலையத்துக்கு கொண்டு வரப்படும் மரக்கறிகளின் அளவும் ஓரளவு குறைந்துள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

மழை காரணமாக மரக்கறிகளின் விளைச்சல் குறைவடைந்தமையே இதற்கான காரணம் எனவும் வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, நேற்றைய நிலவரப்படி தம்புளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ பச்சை மிளகாய் 1,300 ரூபாய் முதல் 1,400 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.


அதேநேரம் ஒரு கிலோகிராம் கரட்டின் மொத்த விற்பனை விலை 900 ரூபாய் வரையி உயர்ந்துள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், கத்தரிக்காய் ஒரு கிலோகிராம் 900 ரூபா விற்கும்,

புடோலங்காய் மற்றும் பீர்க்கங்களாய் ஒரு கிலோகிராம் 200 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# மக்களின் நம்பிக்கை பெற்ற சேவையாக இலங்கையின் ரயில்சேவை மாற்றப்படும்

## ரில்வின் சில்வா வலியுறுத்து



கொழும்பு, பெப். 18

மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒரு சேவையாக இலங்கையின் ரயில் சேவை மீளமைக்கப்படும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா கண்டியில் தெரிவித்துள்ளார்.

கண்டியில் இருந்து தெமோதர நோக்கி பயணித்த "எல்ல ஒடிசி - கண்டி ரயிலில் எல்லவுக்கு செல்வதற்காக நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கண்டி ரயில் நிலையத்துக்கு சென்றபோது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த ரில்வின் சில்வா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-ரயில் சேவை மக்களுக்கு வசதியாகவும் நம்பகத்தன்மையுடனும் இலாபகரமாகவும் அமையவேண்டும். அதற்காக அரசு பாடுபட்டு வருகிறது.

முந்தைய அரசுகள் நமது நாட்டின் அரச நிறுவனங்களையும் பொதுச் சேவையையும் புறக்கணித்தன. இதனால், அந்த நிறுவனங்கள் சரிந்தன.

இடிந்து விழுந்த நிறுவனங்களில் ரயில்துறையும் அடங்கும். ரயில் துறையினரின் அலட்சியத்தால் ரயில் சேவைகள் பதிவு இரத்து செய்யப்பட்டுள்ளது. இதனால் ரயில் சேவை மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கை உடைந்தது.

புதிய அரசாங்கம் வந்த பின்னர் அனைத்து அமைச்சர்களும் பிரதி அமைச்சர்களும் தலையிட்டு ரயில் சேவையை மீண்டும் பொதுச் சேவையாக கட்டியெழுப்ப பாடுபட்டனர்.

இந்தச் சேவை மக்களுக்கு வசதியாகவும் நம்பகமானதாகவும் அதிக இலாபம் தரக்கூடியதாகவும் மாற்றப்படும்-என்றார்.

# "பிரதான பிரச்னைகளை மறந்து யு.எஸ்.எய்ட் சர்ச்சை பேசுபொருளாவது பொருத்தமற்றது"

கொழும்பு, பெப். 18

சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்திலிருந்து (யு.எஸ்.எய்ட்) நிதியைப் பெற்று அதனை எவரேனும் மோசடி செய்திருப்பார்களாயின் அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அதனை விடுத்து நாட்டிலுள்ள பிரதான பிரச்னைகளை மறந்து இதனை பேசுபொருளாக்குவது பொறுத்தமானதல்ல என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-சர்வதேச அபிவிருத்திக்கான அமெரிக்க முகவரகத்தின் ஊடாக 1977ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு ஒத்துழைப்புக்கள் கிடைத்துள்ளன.

கொவிட் காலத்திலிருந்து அமெரிக்காவிலிருந்து பைசர் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தபோது, முதன்மை பட்டியலில் இலங்கை உள்வாங்கப் பட்டிருக்கவில்லை.

எனினும் அன்று எதிர்க்கட்சியிலிருந்தாலும் மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர யு.ஸ்.எய்ட் நிறுவனத்தின் பிரதானி சமந்தா பவரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமையவே எமக்கு விரைவில் பைசர் தடுப்பூசி கிடைக்கப் பெற்றது.

அதன் பின்னர் கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் உரத்தட்டுப்பாடு ஏற்பட்ட போது, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கோரிக்கைக்கு அமையவே இந்த நிறுவனமே உர நிவாரணத்தை வழங்கியது.

பாராளுமன்ற குழுக்களுக்குக்கூட இந்நிதி உதவி கிடைக்கப் பெற்றுள்ளது. நான் தலைமைத்துவம் வகிக்கும் அரச நிதி பற்றி பாராளுமன்றக் குழுவுக்கும் பாராளுமன்றத்தின் ஊடாக நிதி உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

அது மாத்திரமின்றி பாராளுமன்ற உறுப்பினர்கள் பலருக்கு சர்வதேச கற்கைகளுக்கான சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டுள்ளன. அந்த அடிப்படையிலேயே பிரதமரின் பெயரும் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு பெயர்ப் பட்டியலைப் பயன்படுத்துவது அவர்கள் மீது சேறு பூசுவதற்காகும். சட்டதரணிகள் சங்கத்துக்கும் பாரிய ஒத்துழைப்புக்கள் கிடைத்துள்ளன.

நீதிமன்றக் கணினி மயமாக்கலுக்குக்கூட இந்நிறுவனம் பாரிய ஒத்துழைப்புக்களை வழங்கியிருக்கிறது.

இந்நிறுவனத்திடமிருந்து கிடைக்கப் பெற்ற நிதி உதவிகளை எவரேனும் தவறாக உபயோகித்திருந்தால் அதற்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுடன் பிரச்னைகளை தீர்த்துக் கொள்ள முடியாததன் காரணமாகவே அவரைவிட்டு பிரிந்து சஜித் பிரேமதாஸவுடன் பயணிக்கின்றோம்.

எமது நிலைப்பாடுகளுடன் இணங்குபவர்களை இணைத்துக் கொண்டு பயணிப்பதற்கு நாம் தயாராகவே இருக்கின்றோம். அதன் அடிப்படையிலேயே எம்மால் தேர்தலிலும் வெற்றி பெற முடியும்.

அதனை விடுத்து கடந்த காலங்களைப் போன்று பஸ்களில் ஆதரவாளர்களை அழைத்து வருவதால் வெற்றி பெறமுடியாது. அந்தக் காலம் கடந்துவிட்டது. மக்களை ஒரு நிலைப்பாட்டின் கீழ் ஒரே இடத்துக்கு கொண்டு வர முடியுமெனில், கட்சி முக்கியமல்ல.

ஊழல்வாதிகளை அடையாளங் காண்பதற்கு இந்த அரசாங்கத்தால் முன்னெடுக்கப் படும் எந்தவொரு வேலைத்திட்டத்துக்கும் எமது முழுமை யான ஒத்துழைப்பை வழங்குவோம்.

அனைவரும் இணைந்து ஊழல் மோசடியை முற்றாக ஒழித்தால் நாட்டை அபிவிருத்தியை நோக்கிக்கொண்டு செல்வது இலகுவாகும்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குட்டி தேர்தலுக்கே அஞ்சும் எதிரணி ஆட்சியை பிடிப்பது வெறும் கனவு!

## பிரதமர் ஹரிணி அமரசூரிய கூறுகிறார்

கொழும்பு, பெப். 18

**உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்குகூட அஞ்சும் எதிர்க்கட்சி தான், ஆட்சியை கைப்பற்றுவதைப்பற்றி கதைத்து வருகின்றது. இது வெறும் கனவு மாத்திரமே என்று பிரதமர் கலாநிதி ஹரிணி அமர சூரிய தெரிவித்தார்.**

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலை ஏப்ரல் மாதத்துக்குள் நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ள நிலையில், அதனை ஏப்ரல் மாதத்துக்கு பின்னர் நடத்துமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ள சூழ்நிலையிலேயே பிரதமர் இவ்வாறு கூறினார்.



அவர் மேலும் தெரிவிக்கை யில்-எம்முடன் எதிரணிக்கு கொள்கை ரீதியாக மோதமுடி யவில்லை. எமது கொள்கைகள் தொடர்பில் விமர்சனங்களை முன்வைக்க முடியவில்லை. எமது அரசியல் கலாசாரத்து டன் அவர்களால் ஒருபோதும் மோதமுடியாது.

அதனால்தான் குப்பைக ளைக்கிளறி, எமக்கு எதிராக சேறுபூசும் கீழ்த்தரமான அரசி யல் செயல்பாடு முன்னெடுக் கப்படுகின்றது.

இது மக்கள் அரசாங்கம். மக்களால் உருவாக்கப்பட்ட, மக்களால் பாதுகாக்கப்பட்டு வரும் அரசாங்கம். எனவே, அரசியலில் தோல்வி அடைந் துள்ள தரப்புகளுக்க, இப்படி யான மக்கள் சக்தியுடன் மோத முடியாது.


அதிகாரத்தில் இருக்கும் நபர்கள்தான் தேர்தலுக்கு அஞ்ச வேண்டும்.

ஆனால் தேர்தலை நடத்த அவசரப்பட வேண் டாம் என எதிரணிகள், தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரியுள் ளன.

மக்கள் மத்திக்கு செல்வ தற்கு நாம் பயப்படவில்லை. மக்களின் நிலைப்பாட்டை அறியவும் நாம் அஞ்சவில்லை. தேர்தல் திகதியை தேர்தல் ஆணைக்குழுவே நிர்ணயிக் கவேண்டும். நாம் தேர்தலை பிற்போடுமாறு கேட்கப்போவ தில்லை.

தேர்தல் ஊடாக மக்கள் மத்திக்கு செல்வதற்கு அஞ்சும், எதிரணியே ஆட்சியை பிடிப் பது பற்றி கதைக்கின்றது. அது முடியுமா? முடியாது. கனவு மாத்திரமே-என்றார். (அ)

# இந்திய தூதர் சந்தோஷ்டன் எரிசக்தி அமைச்சர் சந்திப்பு



கொழும்பு, பெப். 18

எரிசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி மற்றும் இலங் கைக்கான இந்திய தூதவர் சந்தோஷ் ஜா ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் நடைபெற்றது.

இலங்கைக்கான இந்தியத் தூதரகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றுள்ளது.

இந்த கலந்துரையாடலில் இரு நாடுகளுக்கும் இடையி லான எரிசக்தி கூட்டிணைவு தொடர்பில் பல்வேறு விடயங் கள் மதிப்பாய்வு செய்யப்பட் டதாக இலங்கைக்கான இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது. (அ)

# எதிர்க்கட்சி எம்.பிக்களுடன் சஜித் விசேட கலந்துரையாடல்

கொழும்பு, பெப். 18

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் எதிர்க்கட் சியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கும் இடையே நேற்று விசேட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸ நாயக்கவினால் வரவு-செலவுத் திட்டம் முன்வைப்பதற்கு முன் னர் பாராளுமன்றத்தில் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.

இந்த விசேட கூட்டத்தில் வரவு-செலவுத்திட்டம் மற்றும் எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

அரசாங்கம் தேர்தல் மேடையில் வழங்கிய வாக்கு றுதிகளை இவ்வருட வரவு- செலவுத் திட்டத்தின் ஊடாக நிறைவேற்றியுள்ளதா என்பது தொடர்பில் அவதானம் செலுத் தப்பட வேண்டும் என்றும், மக் களுக்குத் தேவையான நிவார ணங்களை பெற்றுக் கொடுப் பதற்கு அரசாங்கத்துக்கு உந் துதல் அளிக்கவேண்டும் என் றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இங்கு தெரி வித்தார்.

இந்தக் கலந்துரையாடலில், மனோ கணேசன், ரவூப் ஹக் கீம், இராசமாணிக்கம் சாணக்கி யன், கயந்த கருணாதிலக்க, ரோஹித அபேகுணவர்தன, அனுராதா ஜயரத்ன, எஸ். சி. சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தயாசிறி ஜய சேகர, ரஞ்சித் மத்தும பண்டார, வி. இராதாகிருஷ்ணன், பத்ம நாதன் சத்தியலிங்கம், ஜே.சி. அலவத்துவல, சாமர சம்பத் தச நாயக்க,

ரவி கருணாநாயக்க, டி.வி சானக்க, காதர் மஸ்தான், முஹமது இஸ்மாயில் முத்து முஹமது ஆகியோர் கலந்து கொண்டனர். (அ)

# காட்டுத் தீ பரவல் குறித்து எச்சரிக்கை

கொழும்பு, பெப். 18

நாட்டில் நிலவும் வறண்ட வானிலை காரணமாக பல பகு திகளில் காட்டுத்தீ பரவல் அதி கரித்துள்ளதாக அனர்த்த முகா மைத்துவ நிலையம் தெரிவித் துள்ளது.

அதன்படி, பதுளை, குரு நாகல், கண்டி மற்றும் நுவரெ லியா ஆகிய மாவட்டங்களில் காட்டுத்தீப்பரவல் அதிகரித் துள்ளதாக அதன் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

அத்துடன், வனவள பாது காப்புத் திணைக்களம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலை யம் ஆகியன பொலிஸாருடன் இணைந்து, காடுகளுக்கு தீ வைப்பவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை களை முன்னெடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ்டபிள் காயம்!

## சந்தேக நபர் போதைப்பொருளுடன் கைது

கொழும்பு, பெப். 18

கொழும்பு, கொம்பனித் தெரு பிரதேசத்தில் கடந்த 13 ஆம் திகதி கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு பொலிஸ் கான்ஸ் டபிள் ஒருவர் காயமடைந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபரொருவர் போதைப் பொருளுடன் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளதாக நாராஹேன்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

நாராஹேன்பிட்டி பொலிஸ ாருக்கு கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் சந்தேக நபர் நாராஹேன்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பக ஹவத்த பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந் தேக நபர் இராஜகிரிய பிரதே சத்தில் வசிக்கும் 38 வயதுடை யவர் ஆவர்.

சந்தேக நபரிடமிருந்து 10 கிராம் 760 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொ ருள் பொலிஸாரால் கைப்பற் றப்பட்டுள்ளது. இது தொடர் பான மேலதிக விசாரணைகளை நாராஹேன்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# பாடசாலை மாணவர்களை வெயிலில் விட வேண்டாம்!

கொழும்பு, பெப். 18

பாடசாலை மாணவர்களை வெயிலில் விடவேண்டாமெ னவும், அவர்கள் வெப்பமான வானிலையில் பாதிக்கப்படக் கூடாதெனக் கல்வியமைச்சின் செயலாளர் நாலக கலுவெவ தெரிவித்தார்.

இல்லங்களுக்கிடையேயான விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான வழிகாட் டல்களை உள்ளடக்கிய சுற்ற றிக்கையை அமைச்சு வெளி யிடுமென கலுவெவ கூறினார்.

தவிர, பாடசாலை விளை யாட்டுப் போட்டிகளின் கால மும் வெப்பமான வானிலை யால் குறைக்கப்பட வேண்டு மென்றவாறான கருத்துகளை கலுவெவ வெளிப்படுத்தியுள் ளார். (அ)

# பேராதனை வைத்தியசாலையில் பரிசோதனை இயந்திரங்கள் பழுது!

## நோயாளிகள் பெரும் அவதி

கொழும்பு, பெப். 18

பேராதனை போதனா வைத் தியசாலையில் பெருங்குடல் மற்றும் கல்லீரல் பரிசோத னைக்கு உபயோகப்படுத்தும் இயந்திரங்கள் பழுதடைந்துள்ள நிலையில்,

அங்கு சிகிச்சை பெறும் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள் ளனர்.

அதன்படி, அந்த வைத்திய சாலையில் நான்கு ஈ.ஆர்.சி.பி. இயந்திரங்கள் உள்ளதாகவும் அவற்றில் மூன்று இயந்திரங்கள் பழுதடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பு தவிர கல்லீரல் பரிசோதனைகள் மேற்கொள் ளப்படும் ஓரிடமாக பேரா தனை விளங்குகிறது.

இந்நிலையில், பேராதனை போதனா வைத்தியசாலையில் இயந்திரங்கள் பழுதடைந்த காரணத்தால் குடல் புற்று நோய்கள் போன்றவற்றை நோயாளர்களில் கண்டறிய முடியாதிருப்பதாகவும் இப்பரி சோதனைகளை தனியார் வைத் தியசாலைகளில் செய்வதாயின் 45,000 முதல் 50,000 ரூபா செல விட நேரும் என்றும் தெரிவிக் கப்படுகிறது.

இத்தகைய பரிசோதனைக ளைச் செய்வதற்காக இந்த நோயாளர்களை கண்டி தேசிய வைத்தியசாலைக்கு அனுப்பு வதால்,

அந்த வைத்தியசாலை யில் சன நெரிசல் காணப்படு வதோடு பரிசோதனையை மேற்கொள்வதிலும் காலதா மதம் ஏற்படுவதாகக் கூறப்ப டுகிறது.

எனவே, பேராதனை போதனா வைத்தியசாலையில் பரிசோதனை இயந்திரங்கள் பழுதடைந்தமை தொடர்பில் உரியவர்கள் நடவடிக்கை எடுக் கவேண்டும் என பொதுமக்கள் கேட்டுள்ளனர். (அ)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது!

கொழும்பு, பெப். 19

மொனராகலை, செவனகல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மஹகம ஜனபதய பிரதேசத்தில் கஞ்சா போதைப்பொருளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக கைப்பற் றப்பட்டதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் தெரிவித் தனர்

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின் பேரில் மேற்கொள் ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொனராகலை, செவனகல பிரதேசத்தில் வசிக்கும் 31 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடமிருந்து 2 கிலோ கஞ்சா போதைப் பொருள் கைப்பற்றப்பட் டுள்ளது.

இதனையடுத்து, கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக செவனகல பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசை விமர்சிக்கும் தரப்பினரை வீடு சென்று அச்சுறுத்துகிறார்கள்

## சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 18

**தற்போதைய அரசாங்கம் என்னவாறான பொய்களை எல்லாம் கூற முடியுமோ அத்தனையையும் கூறி மக்களை ஏமாற்றியுள்ளது. மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளது. சொன்னதைச் செய்ய முடியாமல் அரசாங்கத்தை விமர்சிக்கும் தரப்பினரை அச்சுறுத்துகிறார்கள்.**

அரசியலமைப்பு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தையும், தாம் விரும்பும் அரசியல் கருத்தைக் கொண்டிருப்பதற் கான சுதந்திரத்தையும் வழங் குகிறது. இது இந்த நாட்டில் காணப்படும் மனித உரிமை யாகும். இந்த அரசாங்கம் இதையும் மீறி நடந்து வருகின்றது என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

களனி பிரதேசத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

மாத்தளை மாவட்டத்தின் யடவத்தை பிரதேசத்தை சேர்ந்த பிரஜை ஒருவர் தனது கருத்துக்களை முகநூல் ஊடாக வெளிப்படுத்தியபோது அரசாங்கத்தையும், மக்கள் விடுதலை முன்னணியையும் சேர்ந்த ஒருவர், வீடு சென்று அரசாங்கத்தை விமர்சிப்பதை நிறுத்துமாறு அழுத்தம் கொடுக்கிறார். அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத வேளையில், பேச்சு சுதந்திரத்தை மறுக்கும் வகையில் வீடு வீடாகச் செல்லும் வேலைத்திட்டத்தை அரசாங்கம் தற்போது முன்னெடுத்து வருகின்றது என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்த நாட்டில் உள்ள 220 இலட்சம் மக்களும் எவருக்கும் அஞ்சாமல் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிடும் உரிமை அவர்களுக்கு காணப்படுகின்றன.

குடி மக்களின் ஜன நாயக உரிமைகளைப் பாதுகாக்க ஐக்கிய மக்கள் சக்தியும் ஐக்கிய மக்கள் கூட்டணியும் முன்நிற்கும். பேச்சு சுதந்திரமும் கருத்து சுதந்திரமும் என்பது தனிமனித உரிமைகளாகும். அதில் யாரும் அழுத்தம் பிரயோகிக்க முடியாது என எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (அ)

# பதுளை விபத்தில் 12 பேர் படுகாயம்!



கொழும்பு, பெப். 18

பதுளை - கந்தகெட்டிய பகுதியில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்

தனியார் பஸ்ஸ/ம் ஆடைத் தொழிற்சாலையிலிருந்து வந்த குழுவை ஏற்றிச் சென்ற வானும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது

இதில் காயமடைந்தவர்கள் கந்தகெட்டிய பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் ஏழு பேர் மேலதிக சிகிச்சைக்காக மஹியங்கனை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் கந்தகெட்டிய பொலிஸார் கூறினர்.

மேலும் வீதியின் குறுகிய சாலையின் வளைவுப் பகுதியில் இரண்டு வாகனங்களும் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. (அ)

# நீர்ப்பாசன பொறியியலாளர்கள் 2 நாள் தொழிற்சங்க போராட்டம்!

கொழும்பு, பெப். 18

நீர்ப்பாசனத் திணைக்களத்தின் உதவி பொறியியலாளர்கள் நேற்றும் இன்றும் சுகயீன விடுமுறையை அறிவித்து, தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

நீர்ப்பாசனத் திணைக்கள உதவி பொறியியல் அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிரோஷன் சில்வா இதனைத் தெரிவித்தார்.

பதவி உயர்வு முறைமையில் நிலவும் முரண்பாடு உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் எனக் கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# சுற்றுலாத்துறை மூலம் இலங்கையின் அந்நிய செலாவணி வருவாய் உயர்வு

கொழும்பு, பெப். 18

சுற்றுலாத்துறை மூலம் இலங்கையின் அந்நிய செலாவணி வருவாய் கடந்த ஜனவரி மாதத்தில் 362 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உயர்வடைந்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் இது 34.5 சதவீதம் அதிகரித்துள்ளது.

கடந்த வருடத்தின் ஜனவரி மாதத்தில் சுற்றுலாத்துறை வருமானம் 269 மில்லியன் அமெரிக்க டொலராகப் பதிவாகியிருந்தது.

அத்துடன் இந்த ஆண்டின் முதல் 44 நாட்களில் சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# டெங்கு ஒழிப்பு உதவியாளர்களுக்கு நிரந்தர நியமனம்!

கொழும்பு, பெப். 18

டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் 310 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது என சுகாதார மற்றும் வெகுஜன ஊடக பிரதி அமைச்சர் வைத்தியர் ஹன்சக விஜேமுனி தெரிவித்தார். கண்டி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பிரதி அமைச்சர் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்து உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாடு முழுதும் தற்பொழுது 310 டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் தற்காலிக அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர்.

இதற்கு நிதி அமைச்சினால் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் இன்னும் இரண்டரை மாதத்துக்குள் இந்த நியமனம் வழங்கப்படும் எனவும் பிரதி அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# ரி-56 ரக துப்பாக்கியுடன் கடற்படை சிப்பாய் கைது!

கொழும்பு, பெப். 18

இலங்கை கடற்படை மற்றும் குளியாப்பிட்டிய பொலிஸார் இணைந்து இன்று (16) அதிகாலை இலுகேன பிரதேசத்தில் மேற்கொண்ட நடவடிக்கையின் போது டி56 ரக துப்பாக்கியுடன் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலிகேன, கல்பொல காலனியில் உள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையில் சந்தேக நபர் பொறுப்பேற்றிருந்த கொழும்பு துறைமுகத்தின் ரன்வல முகாமில் உள்ள ஆயுதக் களஞ்சியத்தில் இருந்து 2021 இல் காணாமல் போன குறித்த துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது. (அ)

# ரயில் சேவைகளின் தரத்தை மேம்படுத்த அரசு நடவடிக்கை

கொழும்பு, பெப். 18

ரயில் தாமதங்களைத் தடுப்பதற்காக, நாளாந்தம் சேர்க்கப்படும் ரயில் இயந்திரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

எல்ல பகுதிக்கு விஜயம் செய்த பின்னர், போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன, ரயில் சேவைகளின் தரத்தை மேம்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-மின்சார ரயில்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்னர் இலங்கையில் ரயில் சேவைகள் இரத்துச் செய்யப்படும் செயற்பாட்டுக்கு தீர்வு காணப்பட வேண்டும். தினமும் சுமார் 217 முதல் 220 ரயில் சேவைகள் உள்ளன. கடந்த முறை அவற்றில் சுமார் 17, 18 அல்லது 20 சேவைகள் இரத்து செய்யப்பட்டன. ரயில் சேவைகள் இரத்துச் செய்வதை நிறுத்த நாம் எங்களால் முடிந்த அனைத்தையும் செய்ய வேண்டும். ரயில் இயந்திரங்களை இயங்க வைக்கும் வகையில் வைத்துக்கொள்வதுதான் இதற்கான ஒரே வழி. சராசரியாக, இலங்கைக்கு நாளாந்த செயல்பாடுகளுக்காக சுமார் 60 முதல் 70 ரயில் இயந்திரங்கள் தேவைப்படுகின்றன. ஆனால் கடந்த காலத்தில், சுமார் 45 அல்லது 50 இயந்திரங்களே செயற்பாட்டில் இருந்தன. இதை அதிகரிக்க நாங்கள் முயற்சி செய்கிறோம். பெப்ரவரி மாத இறுதிக்குள், நாளாந்த செயல் பாட்டிற்குப் பயன்படுத்தப் படும் இயந்திரங்களின் எண்ணிக்கையை 60இற்கும் அதிகமாக பயன்படுத்த நினைக்கி றோம் இலங்கையில் இயக்கப் படும் ரயில்களில் சுமார் 52 வீதமானவை நாளாந்தம் இயக்கப்படுகின்றன. 17 வீதமானவை 10 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வருகின்றன. 10மூ வீதமானவை 30 நிமிடங்களுக்கு மேல் தாமதமாக வருகின்றன. -என்றார். (அ)

## ஹர்ஷவுக்கு ஜனாதிபதி கிண்டல்!

கொழும்பு, ஏப். 18

ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க, பாராளுமன்றத் தில் தற்போது 2025 ஆம் ஆ ண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தார். அப்போது, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ ஏதோ கூறினார்.

கேள்வியெழுப்பிய ஜனா திபதி அனுரகுமார திஸா நாயக்க, என்ன ஹர்ஷ, நீங்கள் கேட்பதை நான் எப்படி கொடுப்பது.

உங்களுக்கு எப்பது கொழும்பு மாவட்ட அமைப் பாளர் பதவியை கொடுப்பது என ஜனாதிபதி கேட்டார்.

இதன்போது அவையில் இருந்த ஆளும் தரப்பினர் கெக் என சிரித்துவிட்டனர். (அ)

# வறட்சியான காலநிலை இம்மாதம் முழுக்க நீடிக்கும்!

கொழும்பு, பெப். 18

நாட்டில் நிலவும் மிகவும் வறட்சியான காலநிலை இம்மாதம் முழுவதும் நீடிக்கலாம் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள் ளது.

இந்த மாதத்தின் எஞ்சிய நாட்களில் பல பிரதேசங்களில் வறட்சியான காலநிலையை எதிர்பார்க்கலாம்.

அதன் பின்னர் குறைந்த மழைப்பொழிவு எதிர்பார்க்கப்படுவதுடன், மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் முந்தைய ஆண்டை விட வெப்பநிலை அதிகமாக இருக்கும் என திணைக்களத்துக்கு பொறுப்பான வளிமண்டலவியல் நிபுணர் மலித் பெர்னாண்டோ சுட்டிக்காட்டினார்.

அதேநேரம், எதிர்வரும் ஆண்டுகளில், புவி வெப்பமடைதலின் அதிகரிப்பு காரணமாக, வெப்ப அலைகள் அதிகமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், இந்த நாட்களில் மனித உடல் உணரும் வெப்பம் அதிகமாக உள்ளது.

கடந்த நாளின் அதிகபட்ச வெப்பநிலை இரத்தினபுரி மாவட்டத்தில் பதிவாகியுள்ளது.

அதன்படி அங்கு 36.7 டிகிரி செல்சியஸ் வெப்பம் பதிவானது.

இது தவிர அனுராதபுரம் மாவட்டத்திலும் யாழ்ப்பாண மாவட்டத்திலும் 33 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது.

மேலும், கொழும்பு, கண்டி மற்றும் காலி மாவட்டங்களிலும் 32 பாகை செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுபானசாலையை மூட வேண்டும் சவப்பெட்டியுடன் மக்கள் போராட்டம்



பெரிய நீலாவணை, பெப்.18

**மக்களின் எதிர்ப்பையும் மீறி பெரிய நீலாவணையில் திறக்கப்பட்டுள்ள மதுபானசாலையை மூட வேண்டும் என வலியுறுத்தி நேற்று முன்தினம் சவப்பெட்டியுடன் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**

அம்பாறை மாவட்டம்பெரிய நீலாவணையில் கடந்த 11 ஆம் திகதி மதுபானசாலை ஒன்று புதிதாக திறக்கப்பட்டது. இதனை மூட வேண்டும் என்று தொடர்ச்சியான போராட்டங்களை மக்கள் முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், பொது மக்கள் நேற்று முன்தினமும் போராட்டத்தை முன்னெடுத்தனர். இதன்போது, அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் க. கோடீஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், பிரதேச செயலாளர் ரி. அதிசயராஜ் ஆகியோர் போராட்டம் நடைபெற்ற பகுதிக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, குறித்த மதுபானசாலைக்கு எதிராக நீதிமன்றம் ஊடாக தடையுத்தரவு ஒன்றை பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக சுமந்திரன் உறுதியளித்தார். பெரிய நீலாவணையில் ஏற்கனவே ஒரு மதுபானசாலை இயங்கி வருகிறது. இந்த நிலையில், குறித்த பகுதியில் புதிதாக மதுபானசாலை ஒன்றை திறப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றன.

பொது அமைப்புகள், ஆலய பரிபாலன சபையினர், மக்கள் என பல்வேறு தரப்பினரும் எதிர்ப்புகளை தெரிவித்தும், கல்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு மகஜர் கையளித்தும் அதனைப் பொருட்படுத்தாது மதுபானசாலை திறக்கப்பட்டுள்ளது. (எ-01)

# பெண்ணை காணவில்லை

கல்முனை, பெப்.18


மூன்று பிள்ளைகளின் தாய் கடந்த 7 நாட்களாக வீடு திரும்பவில்லை என்று உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதியைச் சேர்ந்த குறித்த பெண் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் காணாமல் போயுள்ளார் என உறவினர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.



குறித்த முறைப்பாட்டின் பிரகாரம் சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பெண் தொடர்பில் ஏதாவது தகவல் அறிந்தால் 076 782 4592, 075 325 1281 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.



திருகோணமலை கோமரங் கடவல, வனவள திணைக்களத்தினரால் பௌத்த அறநெறிப் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு மரக்கன்றுகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.

# ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்க கர்ப்பவதிகளுக்கு விசேட கருத்தரங்கு

அட்டாளைச்சேனை, பெப்.18

வளமான பெற்றோர்களிடமிருந்து ஆற்றலுள்ள பிள்ளைகளை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளில் அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட கர்ப்பவதி தாய்மார்களுக்கும், அவர்களின் கணவர்களுக்குமான ஒருநாள் விழிப்புணர்வு கருத்தரங்கு நேற்று முன்தினம் அட்டாளைச்சேனை யாடே மண்டபத்தில் நடைபெற்றது.


அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம். எம். இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற



இந்தக் கருத்தரங்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் தொற்று நோயியல் பொறுப்பு வைத்திய அதிகாரி பசால், ஒலுவில் பிரதேச மருத்துவமனையின் பொறுப்பதிகாரி ஏ. எல். அலாவுதீன் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு, கர்ப்பகால ஊட்டச்சத்து சமநிலை முக்கியத்துவம், கிளினிக் வருகை, கணவனின் பங்களிப்பு மற்றும் குழந்தை பிறந்த பின்னர் தடுப்பூசி ஏற்றுதல் தொடர்பான அறிவுரைகளை வழங்கினர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீனின் அறிவுரைக்கமைய நடைபெற்ற இந்த கருத்தரங்கில் 200 இற்கும் மேற்பட்ட கர்ப்பவதிகள் கலந்துகொண்டனர். (எ)

# நெல் அறுவடை இயந்திரம் விபத்து



கல்முனை, பெப்.18

உழவியந்திரத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட நெல் அறுவடை செய்யும் இயந்திரம் குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை கல்முனை பிரதான வீதியில் தென்கிழக்குப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்கு அருகாமையில் இடம்பெற்றது.

குறித்த விபத்தில் உழவியந்திரம் மற்றும் நெல் அறுவடை செய்யும் இயந்திரம் பகுதியளவில் சேதமடைந்தன. உயிரிழப்புகள் எதுவும் ஏற்படவில்லை. (எ- 01)

# அழகான நாடு - புன்னகை மக்கள் கிளீன் சிறீலங்கா திட்டம் ஆரம்பம்



பொத்துவில், பெப். 18

அழகான நாடு - புன்னகை மக்கள் எனும் தொனிப்பொருளில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நாடுபூராகவும் உள்ள கரையோர பிரதேசங்களில் கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வகையில், கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தில் உள்ள கரையோரப் பிரதேசங்களான பொத்துவில் தொடக்கம் பெரிய நீலாவணை வரை கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டம் செயல்படுத்தப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம். எம். ஆசிக் தலைமையில் நடைபெற்ற பிரதான நிகழ்வில், தேசிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா கலந்து கொண்டு இந்த வேலைத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

சாய்ந்தமருது பிரதேசத்தில் கரையோர பிரதேசங்களை இரண்டாகப் பிரித்து அதில் 10 இடங்களைத் தெரிவு செய்து கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. (எ)

# கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தில் பெருமளவு இளைஞர்களும் இணைவு

சாய்ந்தமருது, பெப்.18

கிளீன் சிறீலங்கா வேலைத்திட்டத்தின் கீழ் சாய்ந்தமருது கடற்கரை பகுதியை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டத்தில் பிரதேச இளைஞர் கழக செயல்பாட்டாளர்களும் இணைந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 15 கடற்கரை பிரதேசங்களை சுத்தம் செய்யும் நிகழ்ச்சித் திட்டம் நேற்று முன்தினம் காலை 06. 30 மணி முதல் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, சாய்ந்தமருது கடற்கரையும் சுத்தம் செய்யப்பட்டது.

சாய்ந்தமருது பிரதேச செயலகம் மற்றும் இளைஞர் சம்மேளனம் அமைப்பின் செயல்பாட்டாளர்களும் இணைந்து சாய்ந்தமருது கடற்கரை பிரதேசத்தை சுத்தப்படுத்தினர்.

கிழக்கு மாகாணத்தில் உள்ள கடற்கரைகளை விரைவாக சுத்தம் செய்யும் செயல்பாட்டை முன்னெடுக்க ஜனாதிபதி செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



"சுத்தமான கடற்கரை - கவர்ந்திழுக்கும் சுற்றுலாத்தளம்" எனும் தொனிப்பொருளை அடைவதற்கு மாவட்ட மட்டத்தில் உள்ள கடற்கரைகளை தூய்மைப்படுத்துவதற்கு இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாவா, அம்பாறை மாவட்ட இளைஞர் சேவை மன்றத்தின் உதவிப் பணிப்பாளர் ஏ. சி. எஸ். தமயந்தி, சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி சமீஹூல் இலாஹி, அமைப்பின் தலைவரும் இளைஞர் சேவை அதிகாரியுமான அன்வர் ஏ. கபூர், சாய்ந்தமருது இளைஞர் சம்மேளனத்தின் தலைவர் ஏ. ஆர். எம். ஜிப்ரான், அமைப்பின் செயல்பாட்டாளர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்க சுரங்கத்தில் நிலச்சரிவு மாலியில் 48 பேர் உயிரிழப்பு!

பமாகோ, பெப்.18

**மாலியில் தங்கச் சுரங்கத்தில் திடீரென ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 48 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.**

மேற்கு ஆபிரிக்க நாடுகளில் ஒன்றான மாலியில் ஏராளமான தங்கச் சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. இதனிடையே அங்கு சட்டவிரோதமாக செயல்பட்டு வரும் சில சுரங்கங்களில் அடிக்கடி நிலச்சரிவுகள் ஏற்படுகின்றன.

இந்த நிலையில், மேற்கு மாலியில் சட்டவிரோதமாக இயங்கி வந்த தங்கச் சுரங்கத்தில் நேற்று முன்தினம் மாலை தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது எதிர்பாராத விதமாக நிலச்சரிவு ஏற்பட்டது.


இதனால், ஏராளமான தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கிக் கொண்டனர்.

சுரங்கத்தில் 1,800 பேர் இருந்ததாக கூறப்படும் நிலையில், 48 தொழிலாளர்கள் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்ததாக கெனீபா தங்கச் சுரங்க தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், இடிபாடுக ளில் சிக்கிய பலரை தேடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

முன்னதாக கடந்த ஆண்டு இதே பகுதியில் ஏற்பட்ட நிலச்சரிவு காரணமாக தங்கச் சுரங்கத்தில் ஒரு சுரங்கப்பாதை இடிந்து விழுந்து 70இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். (எ)

# அமெரிக்காவில் சூறாவளி பத்துப் பேர் பலியாகினர்!



வாஷிங்டன், பெப்.18

அமெரிக்காவில் வீசிய கடும் சூறாவளியால் பத்துப் பேர் பலியாகினர்.

அந்த நாட்டில் அவ்வப்போது ஏற்படும் சக்தி வாய்ந்த குளிர்கால சூறாவளிகளால் அதிகளவில் பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. இந்த நிலையில், கென்டகி, ஜார்ஜியா உள்ளிட்ட மாகாணங்களில் நேற்று முன்தினம் வீசிய கடும் சூறாவளியில் பலர் சிக்கிக் கொண்டனர். இதில், கென்டகியில் 8 பேர் உட்பட மொத்தம் 10 பேர் பலியாகினர்.

டென்னஸ்ஸீ, கென்டகி மற்றும் விர்ஜீனியா உள்ளிட்ட பல்வேறு மாகாணங்களில் வெள்ளம் ஏற்பட்டு, வாகனங்கள் நீரில் மூழ்கி காணப்படுகின்றன. மரங்கள் வேரோடு சாய்ந்துள்ளன. வீடுகள், கட்டடங்களை வெள்ள நீர் சூழ்ந்து காணப்படுகிறது. மக்கள் வீடுகளை விட்டு வெளியேற முடியாமல் தவித்து வருகின்றனர். (எ)

# ஆஸியில் வெளிநாட்டினர் வீடு வாங்க தடை விதிப்பு

மெல்பேர்ன், பெப்.18

அவுஸ்திரேலியாவில் வெளிநாட்டினர் வீடுகள் வாங்க அரசு தடை விதித்துள்ளது.

அந்த நாட்டில் அரசு சார்பில் வீடு கட்டி பொதுமக்களுக்கு விற்பனைக்காக வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. வெளிநாட்டில் இருந்து புலம் பெயர்ந்தவர்களும், அயல்நாட்டு நிறுவனங்களும் அந்தத் திட்டத்தில் முதலீடு செய்து வீடுகளை வாங்க அனுமதிக்கப்பட்டிருந்தது.

சீனா, நெதர்லாந்து, அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவர்கள் அவுஸ்திரேலியாவில் வீடுகளை வாங்கி குவித்து வந்தனர். இந்த நிலையில் அங்கு வெளிநாட்டினர் வீடு வாங்குவதற்கு அரசாங்கம் தற்காலிக தடை விதித்துள்ளது. உள்நாட்டு மக்களுக்கு முன்னுரிமை வழங்கும் நோக்கத்தில் எதிர்வரும் 2027ஆம் ஆண்டு வரை 2 ஆண்டுகளுக்கு இந்தத் தடை அமுலில் இருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# கூட்ட நெரிசலால் 18 பேர் உயிரிழப்பு

புதுடில்லி, பெப்.18

இந்தியாவில் மகா கும்பமேளாவில் கலந்து கொள்வதற்காக சென்ற பக்தர்கள் டில்லி ரயில் நிலையத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கிக் கொண்டனர்.

இதில், 18 பேர் உயிரிழந்தனர்.

உத்தர பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளா நிகழ்ச்சியில் தினம்தோறும் இலட்சக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர். இதுவரை 50 கோடிக்கும் அதிகமானோர் புனித நீராடியுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில், டில்லி ரயில் நிலையத்தில் கடந்த சனிக்கிழமையன்று நடைமேடையில் ஆயிரக்கணக்கானோர் ரயிலுக்காக காத்திருந்தனர்.

அப்போது, ஒரே நேரத்தில் ஏராளமானோர் ரயிலில் ஏறி இடம்பிடிக்க முண் டியத்ததால் 18 பேர் மூச்சுத் திணறி உயிரிழந்தனர். ஏராள மானோர் காயமடைந்தனர். (எ)

# ஊழல் வழக்கில் சிக்கிய முன்னாள் பிரதமர் கைது

போர்ட் லூயிஸ், பெப்.18

ஊழல் வழக்கில் சிக்கிய மொரிசியஸ் முன்னாள் பிரதமர் கைது செய்யப்பட்டுள்ளார்.



அந்த நாட்டின் பிரதமராக பிரவிந்த் ஜக்நாத் பதவி வகித்து வந்தார். கடந்த ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் அவர் தலைமையிலான கட்சி தோல்வியடைந்தது.

முன்னதாக பாதுகாப்பு, நிதித்துறை, உள்துறை மற்றும் வெளிவிவகார அமைச்சராகவும் பிரவிந்த் ஜக்நாத் பொறுப்பு வகித்தார். இந்த நிலையில் அவர் பதவிவகித்தபோது தன்னுடைய அதிகாரத்தை பயன்படுத்தி சொத்து குவித்ததாக புகார்கள் எழுந்தன.

இதன்பேரில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து அவருடைய வீடு மற்றும் அலுவலகங்களில் சோதனை நடத்தினர். அப்போது, இலங்கை மதிப்பில் சுமார் 80 ஆயிரம் கோடி ரூபாய் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து அவரை அந்த நாட் டின் ஊழல் தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர். (எ)

# இருவேறு விபத்துக்களில் 16 பேர் பலி, 45 பேர் காயம்

இஸ்லாமாபாத், பெப்.18

பாகிஸ்தானில் இருவேறு விபத்துக்களில் சிக்கி 16 பேர் உயிரிழந்தனர். இதேவேளை, 45 பேர் படுகாயமடைந்தனர்.

சிந்த பகுதியில் நடைபெறும் மத நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் சென்ற வாகனங்கள் விபத்தில் சிக்கின.

இதில், பெனாசிராபாத் மாவட்டத்தில் உள்ள காசி அகமத் நகர் அருகே வான் மற்றும் லொறி மோதி விபத்து ஏற்பட்டதில் 5 பேர் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர். இதேவேளை, கயிர்பூர் மாவட்டத்தில் உள்ள ராணிபூர் பகுதி அருகே பஸ் மற்றும் ஓட்டோ மோதிய விபத்தில் 11 பேர் உயிரிழந்த நிலையில், 35 பேர் படுகாயமடைந்தனர். (எ)

# அமெரிக்காவில் 10, 000 அரசு ஊழியர்கள் நீக்கம்

வாஷிங்டன், பெப்.18

10, 000 அரசு ஊழியர்களை பணிநீக்கம் செய்வதற்கான அதிரடி உத்தரவை அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பிறப்பித்துள்ளார். அமெரிக்க அரசாங்கத்தின் செயல்பிரிவுத் தலைவராக தொழிலதிபர் எலான் மஸ்க்கை ட்ரம்ப் நியமித்தார். அவரின் பரிந்துரையின்படியே இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையை ட்ரம்ப் தொடங்கியுள்ளார்.

இதன்படி தற்போது 9,500 இற்கும் மேற்பட்ட ஊழியர்களை பணிநீக்கம் செய்ய ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்துள்ளார். (எ)

# இந்தியாவுக்கு இதுவரை வழங்கிவந்த 21 மில்லியன் டொலர் நிதி நிறுத்தம்!

## எலான் மஸ்க் தலைமையிலான குழு அதிரடி

வாஷிங்டன், பெப்.18

கோடீஸ்வரர் எலான் மஸ்க் தலைமையிலான அமெரிக்க அரசின் செயல்திறன் துறை, இந்தியாவில் வாக்காளர்களின் சதவீதத்தை அதிகரிக்க வழங்கப்பட்ட 21 மில்லியன் டொலர் நிதியை இரத்துச் செய்வதாக அறிவித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க அரசின் செயல்திறன் துறையின் அதிகாரபூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், மால்டோவா நாட்டுக்கான 22 மில்லியன் டொலர் மற்றும் இந்தியாவில் வாக்காளர்களின் சதவீதத்தை அதிகரிப்பதற்கான 21 மில்லியன் டொலர் உட்பட பல்வேறு நாடுகளுக்கான நிதி நிறுத்தம் விவரம் இடம்பெற்றுள்ளது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அமெரிக்கப் பயணத்துக்கு சில நாட்களுக்கு பின்பு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. தனது அமெரிக்க பயணத்தின் போது பிரதமர் மோடி, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மற்றும் எலான் மஸ்கை சந்தித்தார். அப்போது, இந்திய - அமெரிக்க உறவுகளை வலுப்படுத்துவது குறித்து விவாதித்தனர். இந்த நிலையில் நிதி

நிறுத்த உத்தரவு விவரம் வெளியாகியுள்ளது.

அதில், பங்களாதேஷில் அரசியல் சூழலை வலுப்படுத்துவதற்கு 29 மில்லியன் அமெரிக்க டொலர், நேபாளத்துக்கான பல்லுயிர் பாதுகாப்புக்கான 10 மில்லியன் டொலர்,

லைபீரியாவுக்கான 1. 5 மில்லியன் டொலர்,

மாலிக்கான 14 மில்லியன் டொலர்,

தெற்கு ஆபிரிக்காவுக்கான 2. 5 மில்லியன் டொலர், ஆசியாவுக்கு கற்றல் விளைவுகளை மேம்படுத்துவதற்கு 47 மில்லியன் டொலர் நிதி உள்ளிட்டவை இரத்துச் செய்யப்பட்டுள்ள பட்டியலில் இடம்பெற்றுள்ளன. (எ)

# மூன்றாம் பாலினத்தவர்கள் இராணுவத்தில் சேரத் தடை

வாஷிங்டன், பெப்.18

அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் இணைவதைத் தடை செய்யும் உத்தரவில் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திட்ட நிலையில் அமெரிக்க இராணுவத்தில் மூன்றாம் பாலினத்தவர்கள் சேர இனி அனுமதிக்கப்படமாட்டார்கள் என்று இராணுவம் உறுதிப்படுத்தியுள்ளது.

இதுகுறித்து அமெரிக்க இராணுவம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிவிப்பில், மூன்றாம் பாலினத்தவர் இனி இராணுவத்தில் சேர அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும், சேவையில் உள்ள உறுப்பினர்களுக்கு பாலின மாற்றம் தொடர்புடைய நடைமுறைகளைச் செய்வதோ, எளிதாக்குவதோ நிறுத்தப்படும் என்றும் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 விக்கெட் வித்தியாசத்தில் அயர்லாந்து அணி வெற்றி!

ஹராரே, பெப். 18

சிம்பாவே அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் அயர் லாந்து அணி வெற்றி பெற்றது.

அயர்லாந்து கிரிக்கெட் அணி சிம்பாவேயில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில், முதல் ஒருநாள் போட்டியில் சிம்பாவே வெற்றி பெற்று தொட ரில் 1-0 என்ற கணக்கில் முன்னிலையில் இருந்தது.

இதனையடுத்து 2ஆவது ஒருநாள் போட்டி ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணிக்கு வெஸ்லி மாதேவரே (61ஓட்டங்கள்) மற்றும் சிக்கந்தர் ராசா (58 ஓட்டங்கள்) தவிர மற்ற வீரர்கள் யாரும் பெரியளவில் ஓட்டங்கள் குவிக்கவில்லை. இதனால் 49 ஓவர்கள் மட்டுமே விளையாடிய சிம்பாவே 245 ஓட்டங் களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. அயர்லாந்து தரப்பில் மார்க் அடேர் 4 விக்கெட்களும், கர்டிஸ் கேம் பர் 3 விக்கெட்களும் வீழ்த்தினர்.

இதனையடுத்து 246 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கிக் களமிறங்கிய அயர்லாந்து அணிக்கு தொடக்க வீரரான பால்பிர்னி 11 ஓட்டங்க ளில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். இதன்பின்னர் ஜோடி சேர்ந்த பால் ஸ்டிர்லிங் - கர்டிஸ் கேம்பர் இணை சிறப்பாக விளையாடி அணியை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது. இருவரும் அரைச்சதம்





அடித்து அசத்தினர்.

கர்டிஸ் கேம்பர் 63 ஓட்டங்களிலும், பால் ஸ்டிர்லிங் 89 ஓட்டங்களிலும் அணி வெற்றியை நெருங்கிய நிலை யில் ஆட்டமிழந்தனர். இறுதிக் கட்டத்தில் டக்கர் (36 ஓட்டங்கள்) பொறுப்புடன் விளையாடி அணியை வெற்றி பெற வைத்தார். 48. 4 ஓவர்களில் 4 விக்கெட்க ளை மட்டுமே இழந்த அயர்லாந்து 249 ஓட்டங்கள் அடித்து 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலையை எட்டியுள் ளது. 3ஆவது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி இன்று 18ஆம் திகதி நடைபெறவுள்ளது. (எ)

# மும்பை அணியில் முஜிபுர் ரஹ்மான்




மும்பை, பெப்.18

இந்தியாவில் இந்த ஆண்டு நடைபெறும் ஐ. பி. எல். போட்டியில் பங்கேற்கும் மும்பை இந்தியன்ஸ் அணி யில் ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த முஜிபுர் ரஹ்மான் இணைந்துள்ளார்.

ஐ. பி. எல். போட்டியில் 5 முறை பட்டம் வென்ற அணியாக மும்பை இந்தியன்ஸ் உள்ளது. இறுதிப் போட்டிக்கு வந்த 5 முறையும் அந்த அணி கிண்ணத்தை கைப்பற்றி சாதனை படைத்துள்ளது. இந்த நிலையில், இந்த ஆண்டுக்கான ஐ. பி. எல். தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி தொடங்கவுள்ளது. மும்பை இந்தியன்ஸ் அணியால் இலங்கை மதிப்பில் சுமார் 16. 27 கோடி ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டிருந்த ஆப்கானிஸ் தான் வீரர் அல்லா கசன்பர் காயம் காரணமாக தொடரி லிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார்.

இதையடுத்து, அவருக்குப் பதிலாக ஆப்கானிஸ்தா னைச் சேர்ந்த முஜிபுர் ரஹ்மான் அணியில் சேர்க்கப்பட் டுள்ளார். முஜிபுர் ரஹ்மானை இலங்கை மதிப்பில் 6. 78 கோடி ரூபாய்க்கு மும்பை இந்தியன்ஸ் அணி வாங்கி யது. இதுவரை 19 ஐ. பி.எல். போட்டிகளில் விளையா டியுள்ள முஜிபுர் ரஹ்மான் 19 விக்கெட்களை வீழ்த்தியுள் ளார். (எ)

# சாதனை படைத்த ஹர்மன்ப்ரீத் கவுர்



வதோதரா, பெப்.18

ரி - 20 கிரிக்கெட்டில் 2ஆவது இந்திய வீராங்கனை யாக ஹர்மன்ப்ரீத் கவுர் மாபெரும் சாதனை படைத்துள் ளார்.

5 அணிகள் இடையிலான 3ஆவது மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடர் இந்தியாவின் பல்வேறு நகரங்க ளில் நடைபெற்று வருகிறது. இந்தத் தொடரில் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்ற 2ஆவது லீக் ஆட்டத்தில் மும்பை இந்தியன்ஸ் - டில்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் தலைவி ஹர்மன்ப்ரீத் கவுர் 42 ஓட்டங்கள் எடுத்தார்.

இதன் மூலம் ரி - 20 கிரிக்கெட்டில் மாபெரும் சாதனை ஒன்றை அவர் படைத்துள்ளார். அதாவது ரி - 20 கிரிக்கெட்டில் 8,000 ஓட்டங்களை கடந்த 2ஆவது இந்திய வீராங்கனை என்ற சாதனையை ஹர்மன்ப்ரீத் கவுர் (8,005) படைத்துள்ளார்.

இந்தப் பட்டியலில் ஸ்மிருதி மந்தனா 8,349 ஓட்டங் கள் எடுத்து முதல் இடத்தில் உள்ளார். மற்ற இந்திய வீராங்கனைகளான ஜெமிமா ரோட்ரிஸ் (5,826 ) 3ஆவது இடத்திலும், ஷபாலி வர்மா (4,542) 4ஆவது இடத்தி லும், மிதாலி ராஜ் (4,349) 5ஆவது இடத்திலும் உள்ள னர். (எ)

# குஜராத் அணி வெற்றி

வதோதரா, பெப்.18

வாரியர்ஸ் அணிக்கு எதிரான போட்டியில் 6 விக்கெட்கள் வித்தியாசத்தில் குஜராத் அணி வெற்றி பெற்றது.

மகளிர் ஐ. பி. எல். என்று அழைக்கப்படும் மகளிர் பிரீமியர் லீக் ரி - 20 கிரிக்கெட் தொடரின் 3ஆவது சீசன் இந்தியாவில் தற்போது நடைபெற்று வருகிறது. இதில் வதோதராவில் நேற்று நடைபெற்ற லீக் ஆட்டத் தில் குஜராத் ஜெயன்ட்ஸ் - உ.பி. வாரியர்ஸ் அணிகள் மோதின. இதில், குஜராத் அணி 18 ஓவர்களில் 4 விக் கெட்கள் இழப்புக்கு 144 ஓட்டங்கள் எடுத்து 6 விக் கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (எ)

# சம்பியன்ஸ் தொடர் நாளை ஆரம்பம்

டுபாய், பெப்.18

சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் நாளை ஆரம்பமாகவுள்ளது.

8 அணிகள் இடையிலான 9ஆவது ஐ. சி. சி. சம்பி யன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி பாகிஸ்தான் மற்றும் டுபாயில் நடத்தப்படுகிறது. நாளை புதன்கிழமை பிற்ப கல் 02. 30 மணிக்கு கராச்சியில் நடக்கும் தொடக்க ஆட்டத்தில் பாகிஸ்தான் - நியூசிலாந்து அணிகள் மோதுகின்றன.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் மட்டும் டுபாய்க்கு மாற்றப்பட்டுள்ளன. இதில், உலகம் முழுவதும் கிரிக்கெட் இரசிகர்கள் ஆவ லுடன் எதிர்நோக்கும் இந்தியா - பாகிஸ்தான் இடையி லான ஆட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடருக்கான இந்திய அணி யினர் கடந்த 15 ஆம் திகதி டுபாய் புறப்பட்டுச் சென்றனர். இதனையடுத்து டுபாயில் நேற்று முன்தினம் முதல் இந்திய வீரர்கள் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வரு கின்றனர். (எ)

# “வரவு- செலவு பார்க்கும் இடமல்ல கிரிக்கெட்”

மதுரை, பெப்.18

கிரிக்கெட் என்பது வரவு - செலவு பார்க்கும் இடமல்ல என்று இந்திய அணியின் முன்னாள் கிரிக் கெட் வீரர் ரவிச்சந்திரன் அஸ்வின் தெரிவித்தார்.

தமிழகம் மதுரை மாவட்ட கிரிக்கெட் சங்க 65ஆவது ஆண்டு விழா நேற்று முன்தினம் நடைபெற் றது. இதில், சிறப்பு விருந்தினராக அஸ்வின் பங்கேற் றார். அப்போது அவர் லீக் கிரிக்கெட் போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு கிண்ணம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

இந்த நிகழ்வில் உரையாற்றி அஸ்வின், “கிரிக்கெட் விளையாடினால் பணம் வரும் என்று நினைக்கக் கூடாது. கிரிக்கெட் விளையாடினால் மகிழ்ச்சி கிடைக் கும் என நினைக்க வேண்டும். அப்படி நினைத்து தான், நான் விளையாடினேன்.

கிரிக்கெட் விளையாடி ஐ.பி.எல்லில் நுழைந்து முன்னேற நினைப்பது ஒவ்வொருவ ரின் நியாயமான கருத்து. கிரிக்கெட் விளையாட வருபவர்கள் வெற்றி பெறுவோம், அடுத்த கட்டத்துக்கு செல்வோம் என நினைக்க வேண்டும்.

கிரிக்கெட்டை நம்புங்கள், மகிழ்ச்சி, சந்தோசம் கிடைக்கும். கிரிக்கெட் என்பது வரவு - செலவு கணக்கு பார்க்கும் இடமல்ல. அப்படி நீங்கள் நினைத்தால் உங்க ளுக்கு ஏமாற்றமே மிஞ்சும். கிரிக்கெட்டில் அரசி யல் இருக்கிறது என நினைத்தால் அது தவறு”- என்றார்.(எ)

# இந்தியா இலகு வெற்றி



புவனேஸ்வர், பெப்.18

2 - 0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி இந்தியா வெற்றி பெற்றது.

6ஆவது புரோ ஹொக்கி லீக் தொடர் பல்வேறு நாட்டில் நடைபெற்று வருகிறது. இந்தியாவின் ஒடிசா மாநிலம் புவனேஷ்வரில் உள்ள கலிங்கா மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் ஆட்டத்தில் இந்திய அணி, ஸ்பெயினை எதிர்கொண்டது. விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்தின் முதல் பாதியில் இரு அணியாலும் கோல் அடிக்க முடியவில்லை.

பிற்பாதியில் இந்திய அணி அடுத்தடுத்து 2 கோல்கள் அடித்து முன்னிலை பெற்றது. ஸ்பெயின் அணியால் ஒரு கோல் கூட அடிக்க முடியவில்லை.

முடிவில் இந்திய அணி 2 - 0 என்ற கோல் கணக்கில் ஸ்பெயினை வீழ்த்தி வெற்றி பெற்றது. இந்திய அணி தரப்பில் மந்தீப் சிங் மற்றும் தில்ப்ரீத் சிங் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர். (எ)

# ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டி முழு அட்டவணை வெளியீடு

மும்பை, பெப்.18

ஐ. பி. எல். கிரிக்கெட் போட்டிக்கான முழு அட்ட வணை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இதன்படி, இம்மாதம் 22ஆம் திகதி நடைபெறும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியுடன் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூரு அணி மோதவுள்ளது.

இந்த ஆட்டம் கொல்கத்தாவில் உள்ள ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெறவுள்ளது. சென்னையில் நடைபெறும் 3ஆவது போட்டியில் மும்பை இந்தியன்ஸ் - சென்னை சுப்பர் கிங்ஸ் அணிகள் மோதவுள்ளன. இறுதிச் சுற்று ஆட்டம் கொல்கத்தாவில் மே மாதம் 25ஆம் திகதி நடைபெறவுள்ளது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5 சதவீத பொருளாதார...

மாற்றத்துக்கான மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான அடித்தளத்தை அமைத்து பொருளாதாரத்தை நிலையான வளர்ச்சி மற்றும் வளர்ச்சியை நோக்கி செலுத்துவதால் இந்த வரவு - செலவு திட்டம் சிறப்புமிக்கதாக மாறும்.

அஸ்வெசும மற்றும் சமூகநல திட்டங்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளோம். இந்த வரவுசெலவுத் திட்டத்தில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டங்கள் மூலம், அரசாங்கம் பேரண்டப் பொருளாதார பாதையில் ஒரு புதிய முன்னுதாரணத்துக்கு அடித்தளம் அமைத்து வருகிறது என்று கூறிய ஜனாதிபதி, நடுத்தர காலத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி 5 சதவீதமாக இருக்கும்.

உற்பத்தி பொருளாதார நடவடிக்கைகளுக்காக, பயன்படுத்தப்படாத அரசுக்குச் சொந்தமான நிலங்களை அரசாங்கம் குத்தகைக்கு விடும்.

ஆசியான் நாடுகளுடனான சிறந்த பொருளாதார உறவுகளை நோக்கமாகக் கொண்டு, மூலோபாய பங்காளிகளுடனான இலங்கையின் சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களின் வலையமைப்பு, பிராந்திய விரிவான பொருளாதார கூட்டாண்மை மற்றும் பிற ஒப்பந்தங்கள் மூலம் விரிவுபடுத்தப்படும்.

அனைத்து குடிமக்களுக்கும் இலங்கை தனித்துவமான டிஜிற்றல் அடையாளத்தை அறிமுகப்படுத்துவது ஒரு முக்கிய முன்னுரிமையாகும். இந்த அடையாளம் டிஜிற்றல் பொருளாதாரத்தின் வளர்ச்சிக்கு அவசியமான ஓர் அடிப்படை டிஜிற்றல் பொது உள்கட்டமைப்பு ஆகும். இந்த செயல்முறையை நோக்கிய நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன. மேலும் இந்த செயல்முறை துரிதப்படுத்தப்படும்.

அடுத்த 5 ஆண்டுகளில் நாட்டின் டிஜிற்றல் பொருளாதாரத்தை 15 பில்லியன் அமெரிக்க டொலர் அல்லது தேசிய பொருளாதாரத்தில் 12 சதவீதத்துக்கு மேல் உயர்த்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்று ஜனாதிபதி கூறினார். இந்த இலட்சியத்தை அடைவதில், தகவல் தொழில்நுட்ப துறையின் ஆண்டு ஏற்றுமதி வருவாயை 500 கோடி அமெரிக்க டொலர்களாக அதிகரிக்க அரசாங்கம் இலக்கு வைத்துள்ளது. இதன்படி, விவரிக்கப்பட்ட முயற்சிகள் மூலம் டிஜிற்றல் பொருளாதார மேம்பாட்டின் விரைவுபடுத்தலை அதிகரிக்க அரசாங்கம் ரூ. 300 கோடியை ஒதுக்க முன்மொழிகிறது.

அரச சேவையில் 30 ஆயிரம் பேரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்ச மாதாந்திர அடிப்படை சம்பளத்தை ரூ. 24 ஆயிரத்து 250இலிருந்து ரூ. 40 ஆயிரமாக உயர்த்த அரசாங்கம் முன்மொழிகிறது. தற்போதைய தற்காலிக இடைக்கால கொடுப்பனவு மற்றும் சிறப்பு கொடுப்பனவு அடிப்படை சம்பளத்துடன் ஒருங்கிணைக்கப்படும். இதனால், குறைந்தபட்ச சம்பளத்தில் ரூ. 8,250 நிகர அதிகரிப்பு கிடைக்கும். இந்த சம்பள அதிகரிப்பின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவு ரூ. 325 பில்லியனாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தற்போதைய நிதி கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு, இந்த சம்பள உயர்வு கட்டங்களாக செயல்படுத்தப்படும் என்று முன்மொழியப்பட்டுள்ளது. மொத்த நிகர சம்பள அதிகரிப்பில், ரூ.5,000 மற்றும் மீதமுள்ள தொகையில் 30 சதவீதம் ஏப்ரல் 2025 முதல் வழங்கப்படும், மீதமுள்ள 70 சதவீதம் ஜனவரி 2026 மற்றும் ஜனவரி 2027 முதல் சமமாக வழங்கப்படும்.

தனியார் துறை ஊழியர்களுக்கான குறைந்தபட்ச மாதாந்திர ஊதியத்தை ஏப்ரல் 2025இல் ரூ. 21 ஆயிரத்திலிருந்து ரூ. 27 ஆயிரமாகவும், 2026 முதல் ரூ. 30 ஆயிரமாகவும் உயர்த்த முதலாளிகள் சங்கங்கள் ஏற்கனவே ஒப்புக் கொண்டுள்ளன.

தோட்டத் தொழிலாளர்களின் தினசரி ஊதியத்தை ரூ. 1,700 ஆக உயர்த்த அரசாங்கம் தலையிடும்.

2025ஆம் ஆண்டில் சமூக பாதுகாப்பு திட்ட நிகர செலவினத்தை அரசாங்கம் ரூ. 232.5 பில்லியனாக உயர்த்தியுள்ளது.

சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த கொடுப்பனவு 7 ஆயிரத்து 500 ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாயாகவும் முதியோருக்கான கொடுப்பனவு 3 ஆயிரம் ரூபாயிலிருந்து 5 ஆயிரம் ரூபாயாகவும் ஏப்ரல் மாதம் முதல் அதிகரிக்கப்படும்.

2024 டிசெம்பரில் பாராளுமன்றத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பிற முக்கிய வருவாய் நடவடிக்கைகளில் தனிநபர் வருமான வரிக்கான வரி இல்லாத வரம்பை அதிகரித்தல், இரண்டாவது வருமான வரி அடுக்கில் மேலும் மாற்றங்கள், புதிய பால்

மற்றும் தயிர் மீதான வற் வரி நீக்கம் ஆகியவை அடங்கும்.

**வடக்கு - கிழக்கு மாகாணங்கள்**

உள்நாட்டு உற்பத்திக்கு தேவையான இரசாயன பொருட்கள் உற்பத்திக்காக பரந்தனில் கைத்தொழில் பேட்டை நிறுவப்படும்.

காங்கேசன்துறை, மாங்குளம் உட்பட 5 இடங்களில் கைத்தொழில் பூங்காக்கள் அமைக்க 50 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.

வடக்கு மாகாணத்தில் தெங்கு முக்கோணம் உள்ளிட்ட புதிய தென்னந்தோப்பு அபிவிருத்திக்கு 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு.

வடக்கு மாகாணத்தில் கிராம வீதிகள் மற்றும் பாலங்களின் அபிவிருத்திக்காக 500 கோடி ரூபாய்.

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலம் அமைப்பதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொது நூலக அபிவிருத்திக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

போரின் பின்னர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீளக்குடியமரும் வீடற்ற மக்களுக்கு வீடமைத்து வழங்க 150 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் 61 எண்ணெய் தாங்கிகளின் கூட்டு அபிவிருத்திக்கு நடவடிக்கை. (ஐ)

## யாழ்ப்பாண...

யாழ். நூலகம், யாழ்ப்பாணம் மற்றும் அதைச் சுற்றியுள்ள தீவுகளைச் சேர்ந்த மாணவர்கள் மற்றும் வாசகர்களால் பயன்படுத்தப்படுகிறது.

யாழ். நூலகத்திற்கு அத்தியாவசிய வசதிகளை வழங்க 100 மில்லியன் ரூபாய். ஏனைய பிரதேசங்களில் நூலகங்களை அபிவிருத்தி செய்வதற்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - என்றார். (அ)

## வட்டுவாகல்...

கோடி ரூபாய் நிதி ஆரம்ப கட்டமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் நேற்று ஜனாதிபதி அனுரகுமார திஸா நாயக்க வரவு - செலவுத் திட்டத்தை சமர்ப்பிக்கும்போதே இவ்விடயத்தை அறிவித்தார்.

தமது தொடர்ச்சியான கோரிக்கையை ஏற்று வட்டுவாகல் பாலத்தின் நிர்மாணத்துக்கான நிதியை இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கியதற்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கும், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் விமல் ரட்நாயக்கவுக்கும், கூட்டுறவுப் பிரதி அமைச்சரும் முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான உபாலி சமரசிங்கவுக்கும் முல்லைத்தீவு மக்களின் சார்பாக தமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் ரவிகரன் மேலும் கூறினார். (அ)

# வவுனியா விபத்தில் ஒருவர் உயிரிழப்பு!

வவுனியா, பெப். 18

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மின்கம்பத்துடன் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

வவுனியா - மன்னார் வீதியில் பறனாலயங்குளம் பகுதியில் நேற்று திங்கட்கிழமை மாலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரிய வருவதாவது,

மோட்டார் சைக்கிளில் இருவர் வவுனியா நோக்கி சென்று கொண்டிருந்தனர். அப்போது, வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்திலிருந்த மின்கம்பத்துடன் மோதுண்டது.

இதில், மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். மற்றையவர் காயமடைந்து வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் அநுராதபுரத்தை சேர்ந்த நிமல் (வயது 35) என்பவரே உயிரிழந்தார்.

விபத்துக் குறித்து பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ஐ-04)

## வடக்கில்...

நடத்த முடியும்?

புலம்பெயர் தமிழர்களின் ஆதரவுடன் தமிழ் இனவாதிகளால் போராட்டம் நடத்தப்படுகிறது. இதற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பினரும் துணை போகின்றனர்.

நீதிமன்ற உத்தரவு இருக்கும்போது தெற்கில் இவ்வாறு ஆர்ப்பாட்டம் நடத்த முடியுமா? வடக்கில் பாதுகாப்புத் தரப்பினர் அமைதியாக இருக்கின்றனர். அங்கு சட்டம் அமுல்படுத்தப்படுவதில்லை.

நாட்டில் மீண்டும் இனவாதத்தை உருவாக்கி அதன்மூலம் அரசியலை முன்னெடுக்க முடியும் என போராட்டக்காரர்கள் நினைக்கிறார்கள். அதற்கு அரசாங்கம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது - என்றார். (அ)

## எம்.பிக்களுக்கு...

வாகன அனுமதி வழங்கப்படாது என்று அவர் மேலும் கூறினார்.

அரசுக்குச் சொந்தமான அனைத்து சொகுசு வாகனங்களும் இந்த ஆண்டு மார்ச் மாதம் ஏலம் விடப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

வளர்ந்து வரும் முதலீட்டாளர்களின் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பொருளாதார திருத்தச் சட்டத்தை திருத்துவதற்கு எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

## அரச...

வருடாந்த சம்பள அதிகரிப்பு 80 வீதத்தால் அதிகரிக்கப்படும்.

தனியார் துறையின் அடிப்படை சம்பள உயர்வை ஏப்ரல் முதல் 27,000 ரூபாய் ஆகவும், அடுத்த ஜனவரி முதல் 30,000 ரூபாய் ஆகவும் அதிகரிக்க இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரச அத்தியாவசிய சேவை வெற்றிடங்களை நிரப்ப 1000 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (அ)

## கிணற்றில்...

இந்தச் சம்பவத்தில் முல்லைத்தீவு - விசுவமடு - ரெட்பானாவை சேர்ந்த தனுசன் டனுசன் (வயது 3) என்ற ஆண் குழந்தையும் அவரின் தாய் மாமனான வட்டுக்கோட்டை தெற்கைச் சேர்ந்த பெருமாள் மகிந்தன் என்பவருமே உயிரிழந்தனர்.

கிணற்றில் குழந்தை மிதப்பதை அவதானித்த அந்தப் பகுதியினர் குழந்தையை மீட்டு யாழ். போதனா மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். எனினும், குழந்தை உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த சம்பவத்தை விசாரித்த பொலிஸார் குறித்த பகுதிக்கு சென்று கிணற்றிலிருந்து குழந்தையின் தாய் மாமனை மீட்டுள்ளனர். அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்ட போதிலும் அவர் உயிரிழந்து விட்டார் என்று கூறப்பட்டது.

இருவரின் உடல்களும் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## உள்ளூராட்சி சபை...

இந்த சட்டமூலம் நிறைவேறியதன் மூலம் உள்ளூராட்சி சபை தேர்தலுக்கு புதிய வேட்புமனுக்களை கோர முடியும். இதற்கான ஏற்பாடுகளை இந்த சட்டமூலம் கொண்டுள்ளது.

பாராளுமன்றத்தில் சட்டமூலம் நிறைவேறியதைத் தொடர்ந்து சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன அதற்கு ஒப்புதல் அளித்தார். (ஐ)

## துண்டு விழும்...

சட்டமூலத்துக்கு அமைய அரசாங்கத்தின் மொத்த செலவீனம் 7,190 பில்லியன் ரூபாயாக கணிப்பிடப் பட்டுள்ளது.

இதற்கிணங்க 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் துண்டுவிழும் தொகை 2,200 பில்லியன் ரூபாயாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உள்ளூராட்சி...

போதே அவர் இதனை குறிப்பிட் டார்.

ஏப்ரல் மாதத்தில் தேர்தலை நடத்துவது என்பது தம்மை பொறுத்தவரை நெருக்கடியாக இருக்கும் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதற்கான காரணம் என்னவெனில், “சாதாரண தரப் பரீட்சை, வரவு - செலவுத் திட்ட விவாதங்கள் மற்றும் உயிர்த்த ஞாயிறு போன்ற சமய நிகழ்வுகள் குறித்த காலப்பகுதியில் வருவதால் பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடுவதில் சிரமம் ஏற்படும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

அத்துடன் தேர்தல் திருத்தங்களில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வழக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் குறித்து மகிழ்ச்சி அடைவதாகவும், பெண்களுக்கு 25 வீதம் வழங்கப்பட்டுள்ளமை பாராட்டத்தக்கது என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அரசினால்...

நாடு சுதந்திரம் அடைந்த பின்னர் சுபீட்சமான காலப்பகுதியென்றால் அது மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியைத் தான் கூற முடியும். பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

அதனை யாரும் மறந்துவிட முடியாது. வரவு - செலவுத் திட்டத்தில் எம்மால் குறிப்பிடப்பட்ட அனைத்தையும் நாம் நிறைவேற்றினோம்.

ஆனால், அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை. அவ்வாறான நிலைமையில் வரவு - செலவுத்திட்ட முன்மொழிவுகளை மாத்திரம் எவ்வாறு செயற்படுத்தமுடியும். அவை வெறும் ஏட்டில் மாத்திரமே காணப்படுகின்றன.

மக்களை ஏமாற்றி போலியான வாக்குறுதிகளை வழங்கினார்கள். தற்போது அவ்வாறான வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருக்கிறார்கள். இதனை மக்களும் நன்கு உணர்ந்துள்ளார்கள் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இலங்கை - இந்திய மீனவரிடையே பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும்

### கனிமொழி எம்.பி. வலியுறுத்து

சென்னை, பெப். 18

இலங்கை இந்திய மீனவர்களிடையேயான பேச்சுவார்த்தைக்கு இந்திய மத்திய அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும் என இந்திய பாராளுமன்ற உறுப்பினர் கனிமொழி வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்நாடு இராமேஸ்வரம் பகுதியில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (அ)

## ஒன்றரை மாதத்தில் 13 துப்பாக்கிச் சூடு!

கொழும்பு, பெப். 18

ஜனவரி 2025 முதல், 13 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 7 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல்களால் நடத்தப்பட்டுள்ளன.

இந்த துப்பாக்கிச் சூடுகளில் 9 பேர் உயிரிழந்துள்ளதாகவும், மேலும் இருவர் காயமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக மனதுங்க தெரிவித்தார்.

இந்தக் காலகட்டத்தில் துப்பாக்கிச் சூட்டுக்கு உதவிய மற்றும் உடந்தையாக இருந்த மற்றும் துப்பாக்கிச் சூடு நடத்தியவர்களாகச் செயல்பட்ட 30 நபர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் கூறுகிறார்.

விசாரணையின்போது கண்டறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில், துப்பாக்கிச் சூட்டில் பயன்படுத்தப்பட்ட மூன்று ரி-56 துப்பாக்கிகள், ஐந்து கைத்துப்பாக்கிகள் மற்றும் நான்கு மோட்டார் சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் குற்றங்களில் தொடர்புடைய நபர்கள் வெளிநாட்டில் இருந்தால், அவர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வரப்படுவார்கள் என்றும், இந்தியாவில் குற்றங்களைச் செய்து தலைமறைவாக இருக்கும் பல குற்றவாளிகளை விரைவில் நாட்டுக்கு அழைத்து வர நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் வலியுறுத்தினார். (அ)

## அருந்ததி சிறீரங்கநாதன் ஆஸியில் காலமானார்!

கொழும்பு, பெப். 18



இலங்கையின் இசை ஆளுமையும் ஊடக ஜாம்பவானுமான 'கலாசூரி' "தேச நேத்ரு" கலாநிதி அருந்ததி சிறீரங்கநாதன் நேற்று ஆஸ்திரேலியாவில் காலமானார்.

அருந்ததி சிறீரங்கநாதன் பாடகி, சிறந்த ஒலிபரப்பாளர், வீணை ஆசிரியர், நடன நிகழ்ச்சிகளின் ஒழுங்கமைப்பாளர் என பல அடையாளங்களை கொண்டவர்.

இவர் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச் சேவையின் பணிப்பாளராகவும் கடமையாற்றினார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகளாக தமிழ், சிங்கள மாணவர்களுக்கு தென்னிந்திய இசை, கர்நாடக சங்கீதம், நாட்டியம் முதலிய கலைகளை கற்பித்து, ஆற்றல் மிகுந்த விரிவுரையாளராக வலம் வந்தவர் அருந்ததி சிறீரங்கநாதன். அதனால் இவரது பெயரிலேயே பல்கலைக்கழகத்தின் கட்புல, கலை, நாட்டிய, சங்கீத பீடத்துக்கான கட்டடமொன்று இயங்கி வருகின்றமை இவரை பெருமைப்படுத்தும் விடயமாகும்.

அன்னாரின் மறைவு இலங்கையின் கலைத்துறையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதோடு, பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும். (அ-2)

# தனியார் காணிகளில் விகாரை கட்டியமை சட்டவிரோதமானதே!

### நீதி கிடைக்குமா என்பது சந்தேகம் என்கிறது யாழ்.கத்தோலிக்க நீதி சமாதான ஆணைக்குழு

யாழ்ப்பாணம், பெப். 18

**தனியார் காணிகளில் விகாரை கட்டியமை சட்டவிரோதமான செயற்பாடு எனக் கூறும் யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு, விகாரை கட்டப்பட்டதை வன்மையாக கண்டித்ததோடு காணி உரிமையாளர்களுக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே என்றும் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பாக யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில்-

கடந்த பல வருடங்களாக இராணுவ ஆக்கிரமிப்பில் இருந்துவந்த தனியார் காணியில் அவர்களது அனுமதியின்றி இராணுவத்தின் பாதுகாவலில் பௌத்த விகாரை (திஸ்ஸ விகாரை) கட்டப்பட்டமையை யாழ். கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழு வன்மையாகக் கண்டிக்கிறது.

இராணுவம் போர்க்காலத்தில் கையகப்படுத்திய ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளில் உள்ள வீடுகள், இந்துக் கோயில்கள், கிறிஸ்தவ ஆலயங்கள் பலவற்றை இடிப்பதற்கும் தரைமட்டமாக்குவதற்கும் இவர்களுக்கு யார் உத்தரவு கொடுத்தது?

அண்மையில் புதிய ஜனாதிபதி "மக்களுடைய காணிகள் மக்களுக்கே வழங்கப்படும்" என்று வழங்கிய வாக்குறுதியின்படி மக்களின் காணிகள் மக்களுக்கே வழங்கப்படுமா?

நீதிமன்றத் தீர்ப்புக்கள் மதிக்கப்படாது கட்டுமானப் பணிகள் பாதுகாப்பு படையினரின் அனுசரணையில் நடக்கும்போது (உ+ம்: குருத்தூர் மலை விவகாரம்) தையிட்டி விகாரை விவகாரத்தில் காணி உரிமையாளர்களுக்கு நீதி கிடைக்குமா என்பது சந்தேகமே.

ஆனால், தையிட்டி விகாரை விவகாரம் இதுபோன்றே வேறு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள இடங்களில் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

இதனை இடித்து அகற்றினால் பிரச்னை தீருமா என்றால், இல்லை என்றே சொல்லவேண்டும். இடிப்பதால் தென்னிலங்கையில் மதக் கடுங்கோட்பாட்டுவாதிகளால் பிரச்னை இன்னமும் மோசமாகும் என்பதே யதார்த்தம்.

அத்துடன் மத நல்லிணக்கம் எட்டாக்கனியாகிவிடும். எனவே, நீதிமன்றத் தீர்ப்புக்களை எல்லா இடங்களிலும் எல்லா மக்களும் (பாதுகாப்புப் படையினர் உட்பட) மதித்து நடப்பது சாத்தியப்படக்கூடிய வழிமுறை என்று நாம் கருதுகிறோம்.

வடக்கு - கிழக்கில் போர் முடிவுக்கு வந்து 16 வருடங்களாகியும் இன்னமும் பெருமளவில் நிலைகொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினர் அங்குள்ள மக்களின் பாதுகாப்பையும் அடிப்படை மனித உரிமைகளையும் மதித்துச் செயற்படும்போது அது இப்பகுதியின் பொருளாதார வளர்ச்சிக்கு ஏற்ற கள நிலையை உருவாக்கும் என குறிப்பிட விரும்புகிறோம் - என்றுள்ளது. (அ)

## மியன்மார் சைபர் முகாம்களில் மேலும் நான்கு இலங்கையர்கள்!



கொழும்பு, பெப். 18

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் மேலும் நான்கு இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் அருண் ஹேமச்சந்திர இதனை தெரிவித்தார். இந்நிலையில், அவர்களின் விடுதலை குறித்து ஆலோசித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர்களில் ஒருவர் தப்பிச் சென்றுவிட்டதாக மியன்மாரில் உள்ள இலங்கைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

மியன்மாரில் உள்ள சைபர் முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 14 இலங்கையர்கள் அண்மையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்நிலையில், சைபர் குற்றவாளிகளின் பிடியிலிருந்து மீட்கப்பட்டு நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட மொத்த இலங்கையர்களின் எண்ணிக்கை 30 ஆகும். (அ)

## 300 ரூபாயை தொடும் தேங்காயின் விலை!

கொழும்பு, பெப். 18

பொதுமக்களுக்கு நியாயமான விலையில் தேங்காய்களை விற்பனை செய்வதற்காக, அரச பெருந்தோட்ட நிறுவனங்களிடமிருந்து தேங்காய்களை வாங்குவதும், சதோச மூலம் விற்பனை செய்வதும் தற்போது பயனற்றதாகிவிட்டதாகவும், நாடு முழுவதும் உள்ள பல சதோச கிளைகளில் தேங்காய்கள் விற்பனை செய்யப்படுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

புறநகர் நகரங்களில் உள்ள தனியார் வியாபாரிகள் ஒரு பெரிய தேங்காயை 290 ரூபாவுக்கு அதிகமாகவும், சராசரி தேங்காயை 260 ரூபாவுக்கும் அதிகமாகவும், சிறிய தேங்காயை 200 ரூபாவுக்கும் விற்பனை செய்வதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

விலை உயர்வு காரணமாக பல நுகர்வோர் தேங்காய் வாங்குவதைத் தவிர்த்து வருவதாகவும், இந்த சூழ்நிலை காரணமாக, வரவிருக்கும் பண்டிகைக் காலத்தில் ஒரு தேங்காய் 300 ரூபாய்க்கு மேல் விற்கப்படும் என்றும் நுகர்வோர் கூறுகின்றனர். (அ)

## இந்திய - இலங்கை வெளியுறவு அமைச்சர்கள் சந்தித்துப் பேச்சு



கொழும்பு, பெப். 18

இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கருக்கும் இலங்கை வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் இடையே கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையிலான பயனுள்ள தொடர்புகள் மற்றும் விரிவான ஒத்துழைப்பு மதிப்பாய்வு செய்யப்பட்டதாக அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தனது எக்ஸ் பதிவில் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதார மீட்சி மற்றும் முன்னேற்றத்திற்கான தனது உறுதிப்பாட்டை இந்திய வெளியுறவு அமைச்சர் தனது பதிவில் மேலும் கூறினார். (அ)

## அரச சொகுசு வாகனங்களை விற்பதற்கு விலை மனு கோரல்

கொழும்பு, பெப். 18

ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான 18 அதிசொகுசு வாகனங்கள், சேவையிலிருந்து நீக்கப்பட்ட எட்டு வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களை விற்பனை செய்வதற்கான விலை மனு கோரலை ஜனாதிபதி அலுவலகம் விடுத்துள்ளது.

அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கும் நிதிப் பொறுப்புணர்வை ஊக்குவிப்பதற்குமான நடவடிக்கையாக, ஜனாதிபதி அலுவலகத்துக்குச் சொந்தமான பல வாகனங்களை விற்பனை செய்யும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

டொயோட்டா லாண்ட் குருஷர், வி 8, லாண்ட் ரோவர், டிபென்டர் மற்றும் பென்ஸ் கார் உள்ளிட்ட பல வாகனங்களும் இந்தப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 18.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org